நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

for young
friends of fmpb

# கேரீச்

இளைஞர் மாத இதழ்



# சிறகடித்துப் பறந்திட வா!

Vol 27-Issue 06 - June - 2025

Private circulation only



# பரிசுத்த ஸ்தலம்

Rev. Selvinraj G Charles



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான இளம் வாலிபர்களே! இந்த மாதத்தில் ஆசரிப்புக் கூடார பரிசுத்த ஸ்தலத்தின் மேன்மையைக் கண்டு நமது பரிசுத்தமுள்ள ஆண்டவரை ஆராதிக்கப் போகின்றோம்.

வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு இஸ்ரவேல் ஜனம் போவதற்கு முன் அந்த ஆசரிப்பு கூடாரத்திலுள்ள பரிசுத்த ஸ்தலம், இஸ்ரவேலருக்கு தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்ற இடமாக இருந்தது. இந்த மகிமையை இஸ்ரவேல் ஜனம் கண்டு அவருக்கு பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்திய இடமாக இருந்தது.

## ஆசரிப்பு கூடாரத்தின் மூன்று பகுதி (The Tabernacle has three parts):

ஆசரிப்பு கூடாரம் மூன்று பகுதிகளைக் கொண்டது 1. வெளிப்பிரகாரம் (Outside) 2. பரிசுத்த ஸ்தலம் (Holy Place) 3. மகா பரிசுத்த ஸ்தலம் (Holy of Holies). எப்படியென்றால் ஒரு மனிதனுக்கு சரீரம், ஆவி, ஆத்துமா இருப்பதைப் போன்று, ஆசரிப்பு கூடாரத்திலும் இந்த மூன்று பாகங்களும் உண்டு. 1தெச. 5:23ன் படி நமது ஆண்டவர் மீண்டும் வரும்போது நமது ஆவி, ஆத்துமா, சரீரம் பரிசுத்தமாய் இருந்தால்தான் பரிசுத்த தேவனை, பரிசுத்த ஸ்தலத்தில் நாம் உண்மையுடன் ஆராதிக்க முடியும்.

நமது சரீரமானது எப்படி வெளிப்படையாக பார்க்க முடியுமோ, அதுபோல ஆசரிப்பு கூடாரத்தில், வெளிப்பிரகாரம் மாத்திரமே வெளிப்படையாய்ப் பார்ப்பதற்கு திறக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய ஆவி, ஆத்துமா போலவே பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும் உள்ப்பிரகாரம் பார்க்க கூடாததுபோல மூடப்பட்டிருக்கும். தங்களின் வெளிப்படையான ஜீவியம், உள்ளான ஜீவியத்திற்கு ஒத்தில்லாதிருக்கிறவர்கள் தேவ சமூகத்துக்கு முன்பாக வாழாமல் மற்றவர்களுக்கு முன்பாக வாழுகிறவர்கள். மற்றவர்களுக்கு முன்பாக மாத்திரம் தங்களை ஆவிக்குரியவர்களாக காண்பிக்க விரும்புகிறவர்கள் மற்றும் உள்ளான ஜீவியத்தோடு ஒத்திராத வெளிப்படையான ஜீவியம் செய்கிற மாய்மாலக்காரர்கள் யாவரையும் தேவன் புறக்கணிப்பார்.

## பரிசுத்த ஸ்தலத்திற்குள் போகும் வழி (The way into the Holy Place):

தேவனுடைய வார்த்தையானது ஆவியையும், ஆத்துமாவையும் பிரிக்கிறதாய் இருக்கிறது (எபி. 4:12). மேலும் நம் இருதயத்தின் நினைவுகள் மற்றும் யோசனைகளை வரையறுக்கிறதாயும் இருக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கும் போது முதலாவது அது நம் சரீரத்தின் மூலம் (கண், காதுகள் மூலம்) நுழைந்து, பின்பு அது நம் ஆத்துமாவிற்குள் சென்று (மனம், சித்தம், உணர்வு), மனதுக்குப் போதித்து நம் உணர்வுகளைக் கிளர்ச்சியூட்டும். ஆனால் அது அங்கே தேங்கி நின்று நம் சித்தத்தைக் கீழ்ப்படிய செய்யவில்லையானால், அந்த வார்த்தை நம் ஆவியில் நுழைய முடியாது. நாமும் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர முடியாது. உதாரணமாக **"நீ ஜெபிக்கும்போது உன் பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்றும், உன்னிமித்தம் மனம் புண்பட்டிருக்கிறான் என்று அறிந்தும், நீ அதை சரிசெய்யாத பட்சத்தில் நீ ஏறெடுத்த ஜெபம் மற்றும் காணிக்கையை தேவன் அங்கீகரிப்பதில்லை"** (மத். 5:23, 24) என்று வாசிக்கின்றோம். இதை நாம் புரிந்து இருந்தும், சம்பந்தப்பட்ட சகோதரனிடம் மன்னிப்புக் கேளாத பட்சத்தில் நம் ஆவி இன்னும் செத்ததாகவே இருக்கிறது. இது எல்லா வசனத்துக்கும் பொருந்தும்.

வார்த்தையைப் புரிந்துகொண்டு சவாலூட்டப்பட்ட வார்த்தை மாம்ச திரையை ஊடுருவி, பரிசுத்த ஸ்தலத்திலிருக்கும் ஆத்துமாவிலும் ஊடுருவி, மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் ஆவியில் செயல்பட்டு, பிரிந்து விடும். இயேசுவும் தம் சித்தத்தின்படியல்ல, தன் பிதாவின் சித்தத்தைச் செய்யும்படியே வானத்திலிருந்து இறங்கி வந்தார் (யோவான் 6:38). இப்படிதான் நாமும் இயேசுவைப் பின்பற்றும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்மில் அநேகர் இன்னும் ஆவிக்குரியவர்களாக மாறாமல் இருப்பதற்கு தாங்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்தும், அவருடைய சித்தத்தைச் செய்யும் பொருட்டு, தங்கள் சுய சித்தத்தை விட்டு விட மனதில்லாது இருப்பதே காரணம். தேவ சித்தத்தைச் செய்ய தீர்மானிக்கும் போதுதான், நாம் பரிசுத்த ஸ்தலத்தில், பரிசுத்தமுள்ள ஆண்டவரை உண்மையுடனும், விடுதலையுடனும் ஆராதிக்க முடியும். இதுதான் பரிசுத்த ஸ்தலம் செல்வதற்கான வழி, வேறு வழி இல்லை. மெய்யான ஆவிக்குரிய தன்மையின் ரகசியமே, ஒருவர் தன் சுய சித்தத்தை மறுத்து பிதாவின் சித்தத்தைச் செய்வதுதான்.

## நமது பரிசுத்த வாழ்வு (Our Holy Life)

நம்முடைய பரிசுத்த வாழ்வு ஒருபோதும் உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக்கூடாது. நாம் எதிர்பார்த்தது நடக்காதிருக்கும்போது நாம் தைரியமிழந்து இருக்க சோதிக்கப்படுகிறோம். ஆனால் நாம் தேவனைத் துதிக்க தீர்மானம் செய்ய வேண்டும். ஒருவேளை நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்கவில்லையானால், நம் உணர்வுகளின் அடிப்படையில் வாழ மறுத்து தேவனைத் துதிக்க வேண்டும். இவ்வழியில் தொடர்ந்து நிலைத்திருந்தால் மாத்திரமே, உண்மையான ஆவிக்குரிய அல்லது பரிசுத்த வாழ்வுக்குரியவர்களாக மாறமுடியும்.

அன்பு வாலிபர்களே! இந்த பரிசுத்த ஸ்தலம் ஏதோ ஒருமுறை நுழையும் வாசல் அல்ல. ஆனால் நம் ஜீவிய காலம் முழுவதும் நாம் நடக்கக்கூடிய வழியாக இது இருக்கிறது. அப்பொழுது மாத்திரமே நாம் எப்பொழுதும் பரிசுத்த ஸ்தலத்தில் ஜீவிக்கிறவர்களாக இருக்க முடியும்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.**

## VISION

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## OBJECTIVE

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266




**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**


ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


| | |
|---|---|
| இளசுகள் நாலும், இலை சாப்பாடும் | - 5 & 6 |
| நான் ஏன் வேறு மதத்தவரை திருமணம் செய்து கொள்ளக்கூடாது? | - 8 |
| பச்சை சட்டைகள் - பாகிஸ்தான் | - 10 |
| பெருமூளை வாத நோய் | - 12 |
| Fake Loan app scam | - 14 |
| பைபிள் வணிகக் கோட்பாடுகள் | - 18 |
| மாம்சீக தோற்றம் மற்றும் ஆவிக்குரிய தோற்றம் | - 20 |

# சிறகடித்துப் பறந்திட வா!

என் அன்பு இளம் உள்ளங்களுக்கு,

கிறிஸ்துவின் இனிமையான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

வண்ணத்துப்பூச்சி என்பது கண்ணைக் கவரும் மிக அழகான நிறங்களில் இறக்கைகள் உள்ள பறக்கும் பூச்சி இனமாகும். பற்பல வண்ணங்களில் இறக்கைகள் கொண்டு அழகாக இருப்பதால் இவை வண்ணத்துப் பூச்சி என்று அழைக்கப்படுகின்றன என்று நாம் அறிந்ததே.

இந்த பூச்சிகள் பூக்களிலிருந்து தேனை உறிஞ்சிப் பருகுவதும், மிக ஒடிசலாக ( Thinly ) இங்கும், அங்கும் சிறகடித்துப் பறப்பதும் மிக அழகாக இருக்கும். ஆனால் இவைகள் உருவாகின்ற விதங்களை நாம் பார்ப்போமானால் முட்டையிலிருந்து புழுவாக உருமாறி, அதன்பின் கூட்டுப்புழு எனப்படும் உறங்கு நிலைக்குப் போய், கடைசியாக அழகான ஒரு வண்ணத்துப் பூச்சியாய் பறந்து செல்வதைக் காண்கிறோம்.

அன்பு வாலிபர்களே, கிறிஸ்துவானவர் என்னையும், உங்களையும் வண்ணத்துப்பூச்சி போல சிறகடித்து பறக்கின்ற அழகான பரிசுத்தமான வாழ்வு வாழ அழைக்கின்றார். வண்ணத்துப்பூச்சி உருவாகிய விதங்களைப் போல கூட்டுப்புழுவாக இருக்கும் நிலையில் நீங்களும், நானும் இருந்துவிடக் கூடாது. கடவுள் நமக்கு தந்திருக்கும் அழகான வாழ்க்கை இன்னும் நாம் சிறகடித்து பறக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டுமே நம்மை தெரிந்து கொண்டிருக்கிறார்.

உனக்குள் பல கனவுகள் இருக்கலாம். ஆனால் களங்கம் இல்லாத வாழ்வு வாழ, உலக ஆசைகளிலிருந்து விடுப்பட்டு உன்னத வாழ்வு வாழ சிறகடித்துப் பறந்திட வா. வானம் தான் உனது எல்லையாக இருக்கட்டும். பரிசுத்தம் உனது (சிந்தையாகட்டும்) நடத்தையாகட்டும். இயேசுவோடு நடப்பது உனது வாழ்க்கை ஆகட்டும். உலக வாழ்விலிருந்து விடுபட்டு, உன்னத வாழ்வில் சிறகடித்து பறக்க உன்னை வாழ்த்துகிறேன்.

சேலம் பெத்தேலில் நடந்த நமது தமிழ் மாநில முகாமில் 387 வாலிபர்கள் கலந்து கொண்டனர். வாலிபர்கள் முகாமில் கலந்து கொள்ள ஜெபித்து, உற்சாகப்படுத்தி, அழைத்து வந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலந்துகொண்ட வாலிப உள்ளங்களில் பரிசுத்த ஆவியானவர் நடப்பித்த கிரியைகளைக் கண்டு ஆண்டவரை அதிகமாக துதிக்கிறேன். வாலிபர் கூடுகையில் நமது பிள்ளைகள் எடுத்த தீர்மானத்தில் நிலையாக நிற்க உங்களின் தனிப்பட்ட ஜெபங்களில் நினைவுக் கூறுங்கள். இந்த மாதம் நடைபெறவுள்ள மாநில முகாமின் பின்தொடர் ஊழியங்கள் ஆசீர்வாதமாக இருக்கவும், நல்ல விளைவுகள் உண்டாகவும் தொடர்ந்து உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

அழகான பாவமில்லாத, பரிசுத்தமான வாழ்வு வாழ்ந்து சிறகடித்துப் பறக்க உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்,
ஜெ. டேனியல் அருள்மணி



# பிரயாண ஊழியம்

Mr. Isaac Kamalesh

TORAH MISSION

1st WEEK MESSAGE

நாம் நினைப்பது போல பிரயாண ஊழியம் என்பது அவ்வளவு எளிதல்ல. புரிந்து கொள்ள சுலபமும் அல்ல. மோசே கூட இந்த ஊழியத்தைக் குறித்து என்ன நினைத்திருப்பார் என்றால் தன் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டு கானானுக்குள் செல்ல வேண்டும். இதன் கால அளவு குறைந்தது 7 நாட்கள் என்று நினைத்திருக்கலாம். ஆனால் எடுத்துக்கொண்டதோ 40 வருடம். சரி அது போகட்டும், ஜனங்களைப் பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டால் அனைவரும் நம்மை நேசிப்பார்கள், ஆதரவாயிருப்பார்கள் என்று நினைத்திருக்கக்கூடும், அது நடந்ததா என்றால் அதுவும் நடக்கவில்லை. சுலபமாக இருந்ததா என்றால் அதுவும் இல்லை. அடிப்படைத் தேவையான தண்ணீர், உணவு இவைகளைப் பெறவே ஒரு திகிலைத் தான் ஏற்படுத்தியது இந்த பிரயாணம். இந்த பிரயாண ஊழியத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள போகிறோம் என்பதுதான் செய்தி. அதற்கு முன்பு தெய்வத்திட்டம் என்ன என்று பார்த்தால் அது நமக்கு சற்றுப் புரியும்.

தேவன் மோசேயிடம் சொல்லும் பொழுது இரண்டு காரியங்களை முன் வைக்கிறார். முதலாவது தேவனுக்கு பலி ஆராதனைச் செய்ய போகவிட வேண்டும் (யாத். 3). இரண்டாவது ஆராதனைச் செய்ய அனுப்ப வேண்டும் (யாத். 4), இந்த ஆராதனை என்பதின் மூல அர்த்தம் பண்டிகை கொண்டாட அனுப்ப வேண்டும் என்பதாகும்.

நாம் நினைக்கிறது போல பிரயாண ஊழியம் என்பது அன்றாட வாழ்வில் நம் பிரயாணங்களில் (*Bus*, *Rail*, விமான பயணங்கள்) நமக்கு அடுத்த நபர்களிடம் சுவிசேஷம் சொல்வதா என்றால் அது இதன் அர்த்தமல்ல. அப்படியெனில் பிரயாண ஊழியம் என்றால் என்ன? சுருக்கமாக சொன்னால் அடிமைத்தனத்திலிருந்து தம் சொந்த ஜனத்தை நித்தியத்திற்கு நேராக வழி நடத்துவது. இது துவங்கி முடிக்கும் ஊழியம் அல்ல. சொந்த ஜனங்களோடு பயணிக்கும் ஊழியம். இந்த ஊழியம் செய்ய தேவன் உன்னை அழைக்கிறார். அதற்கென்று தான் உன்னை மோசேயை ஆயத்தப்படுத்தியது போல 40 ஆண்டுகள் அரண்மனையிலும், 40 ஆண்டுகள் மீதியான் தேசத்திலும் பயிற்றுவிக்கிறார். ஆனால் ஊழியம் நாம் நினைப்பது போல சொகுசு ஊழியமல்ல. வனாந்தர ஊழியம்.

இந்த ஊழியத்தில் உன் வீட்டில் உள்ளவர்கள் கூட உன்னைக் குறைத்து மதிப்பிடலாம் (மோசேக்கு நடந்தது போல). ஆனால் நீயோ அவர்களுக்காக மன்றாட வேண்டும். அவர்களை தேவ கோபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். மேலும் இந்த ஊழியத்தில் *Teen Age* வயதினருக்கும் பொறுப்பு கொடுத்து வழிநடத்தலாம் (பெசலெயேலைப் போல). இந்த பிரயாண ஊழியத்தின் சிறப்பைச் சொன்னால் நீங்களும் உடனே இந்த ஊழியத்தை ஆரம்பிக்க கீழ்காணும் மூன்று உற்சாகங்கள் கிடைக்கும்.

- ★ தேவ வழி நடத்துதல் இருக்கும் (மேகஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம்).
- ★ வேளா வேளைக்கு உணவு கிடைக்கும் (மன்னா, காடை).
- ★ இவை அனைத்திற்கும் மேலாக தினம்தினம் ஆவிக்குரிய வளர்ச்சியாக தொடர்ந்து ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாம். எப்படியெனில் வனாந்தர பயணத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கிச்சென்ற இடங்கள் 42 (42 பாளையம்).

இந்த ஊழியத்தின் அடிப்படை என்னவென்றால் வேதபாட வகுப்பு (*Bible Study*). இந்த வேதப்பாட வகுப்புகள் உன் வயதினரை ஒன்று சேர்த்தோ, நீ பங்கு பெறும் திருச்சபையிலோ, முறையான வாலிபர் கூடுகையிலோ அல்லது நீ வசிக்கும் பகுதியிலோ என்று எப்படி வாய்ப்பு கிடைக்கிறதோ அதன்படி துவங்கலாம். இதில் வரும் பாடத்திட்டம் கட்டளைகள் (10), நியாயபிரமாணம் (613), பலிகள் (5), பண்டிகைகள் (7), அடைக்கலப்பட்டணம் (6), பாளையங்கள் (42) என நீளும் இந்த பாடத்திட்டம் அனைத்தும் கிறிஸ்துவைப் பற்றினதே. இந்த ஊழியத்திற்கு வரவேற்பு இருக்காது. இது கடினம் என்பார்கள். புரியவில்லை என்பார்கள். இது நமக்கு தேவை இல்லை. இது பழைய ஏற்பாட்டு யூதர்களுக்கானது குறிப்பாக பிரயாணத்திலிருந்த இஸ்ரவேலர்களுக்கு என்பார்கள். மேலும் முறுமுறுப்பு, கோபம், எதிர்ப்பு எனத் தொடர்ந்து தங்களுக்கென்று ஒரு தலைவனைத் தேர்வு செய்து மீண்டும் எகிப்துக்குப் போக திட்டம் தீட்டுவார்கள். இதை எப்படி செய்ய ஆரம்பிக்கப் போகிறாய். அல்லது எப்படி கொண்டு செல்ல திட்டம் தீட்டுகிறாய் என்பது உன் தீர்மானத்தையும், உறுதியையும், உன் ஆவிக்குரிய வாழ்க்கையையும் பொறுத்தது. ஆனால் ஒன்றை நீ அறிந்துக் கொள். வேதத்தில் சொல்லப்பட்ட ஊழியங்களில் இது ஒரு அடிப்படை ஊழியம். இன்றே துவங்கு அநேகர் இதற்கு முதலில் வரலாம். கடைசியாக கூட்டம் குறையவும் வாய்ப்பு உண்டு. ஆனால் இரண்டு பேரையாவது கானானுக்குள் அனுப்பலாம்.

## பயணிப்போம்! வா!

Mr. Isaac Kamalesh

# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

**(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)**

(பெத்தேல்-டேனிஷ்பேட்டை, தமிழ் மாநில முகாமின் இரண்டாம் நாள் உபவாச தினத்தன்று சாயங்காலம் உணவு வேளையின் போது)

சாதுரியன்: டேய் இதுக்கு முன்னாடி *fasting* இருந்திருக்கியா?

ரகசியம்: இல்லை '*Church*ல வழக்கம்போல' உபவாச கூட்டமுன்னு சொல்லுவோம். அதுவும் 11 மணி முதல் 2 மணி வரை தான். ஆனால் நாங்கள் 11:30க்கு ஆரம்பித்து 1:30க்கு முடிச்சிடுவோம்.

விஷயம்: சரி இதுல *fasting* எப்போ...?

ரகசியம்: அதான் தெரியல, காலை சாப்பாடு முடிச்சு, மதியம் 2 மணிக்கு சாப்பிடுறது... இதுல எங்க *fasting*. இது வழக்கம்போல நடக்கிறதுனால, ஒரு நாளும் சிந்திக்கல.

சாதுரியன்: சரி நீ உண்மைய ஒத்துக்கிட்ட அதுவே சந்தோஷம்.

சத்தியன்: டேய் ஏன் இரண்டாவது சாப்பாடு வாங்க இவ்வளவு நேரம் *wait* பண்ணுறோம்.

சாதுரியன்: அதுவா சாப்பாடு பெண்கள் சாப்பிடுகிற இடத்திலிருந்து கொண்டு வந்துட்டு இருக்காங்க.

ரகசியம்: இங்கேயும் பங்கீட்டு பிரச்சனை இருக்கு. (எல்லாம் சிரிப்பு)
சரி டேய் நான் நாளைக்கு சாயங்காலம் புறப்படுகிறேன்.

சாதுரியன்: ஏன் *Sunday Communion Service*க்கு இருக்கலையா?

ரகசியம்: இல்லை, நான் என் *Church*க்கு போறேன். சரி இங்க யார் தான் *Service Attend* பண்ணுவாங்க.

சாதுரியன்: இயக்கத்தில் இருக்கிறவங்க இருப்பாங்க, இயக்கத்துக்கு ஹெல்ப் பண்றவங்க, *Attend* பண்ணி பார்ப்போமுன்னு நினைக்கிறவங்க போயிருவாங்க (அனைவரும் சிரிப்பு)

ரகசியம்: நீ என்னை *Emotional Block* பண்ணுற.

விஷயம்: *Emotional Block*னு சொன்ன பிறகு தான் எனக்கு ஒன்னு ஞாபகத்துக்கு வருது. இயேசு பேதுருவை (யோவான் 21) *Emotional Block* பண்ணிணாருன்னு சொல்லுறாண்டா ஒருத்தன்.

சாதுரியன்: அடப்பாவி! யாருடா அது... எதும் செய்தியிலா சொன்னாங்க.

விஷயம்: செய்தில!! இல்ல.... இல்ல... யாருமே அந்த பக்கமே போகலையே (யோவான் 21:15). *Print* பண்ணி கட்டி தொங்கவிட்டதோடு சரி (அனைவரும் சிரிப்பு)

சாதுரியன்: அதப்பத்தி எனக்கு அநேக சந்தேகங்கள் இருக்குடா.

விஷயம்: எதுல 21:15லேயா?
அதெல்லாம் பத்தி இப்ப பேச முடியாது. ஏன்னா அதுக்கு பதில் அந்த அதிகாரத்தின் கடைசியிலேயே இருக்கு 21:25... (அனைவரும் சிரிப்பு)

சத்தியன்: ஏன்டா அவியலுல இருக்கிற பீன்ஸ், உருளையை நாய்க்கு போடுற...

ரகசியம்: அது... அவியல் அவியலடா... *Sorry* டா

விஷயம்: ஆமா இயேசு ஏன் அந்த கானானிய பெண்ணுக்கிட்ட "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்கு போடலாகாதுன்னு" மூஞ்சில அடிச்ச மாதிரி சொல்லிட்டாரு. டேய் சத்தியம் அது பத்தி ஏதாவது தெரியுமா உனக்கு.

சாதுரியன்: அதுல *Highlight*யே அந்த பெண்ணோட *Smart Reply* தான். அதை இயேசு கூட உன் விசுவாசம் பெரிதுன்னு மெச்சுக்கிட்டாரு.

சத்தியன்: அதாவது முதலில் நாய் பற்றி வேதம் என்ன சொல்கிறதுன்னு சொல்றேன். வேதத்தில் நாயைப்பற்றி 41 இடங்களில் சொல்லப்பட்டாலும் பெரும்பாலும் எதிர்மறையாகவே சித்தரிக்கப்படுகிறது. மேலும் அவமதிப்பு மற்றும் நிந்தனையின் சொல்லாகவும் உள்ளது.
புறஜாதிகளை மற்றும் ஆன்மீகமற்றவர்களை யூதர்கள் நாய் என்றே அழைத்தனர். பேதுரு கூட ஒரே வசனத்தில் நாயையும், பன்றியையும் சேர்த்துக் குறிப்பிடுகிறார். சில நேர்மறையான செயல்களும் சொல்லப்படுகிறது. ஆனாலும் தேவராஜ்யத்தின் புறம்பாகவும், அநீதி பற்றிய குறிப்புகளிலும் "நாய்" இடம் பெறுகிறது.

சாதுரியன்: இது தெரிஞ்சா நாயை பிள்ளை மாதிரி வளர்க்கிற கிறிஸ்தவர்கள் பைபிள் வாசிக்கிறதையே நிறுத்திடுவாங்களே. (அனைவரும் சிரிப்பு)

விஷயம்: டேய் அந்த கானானிய பெண் பற்றி வரும் இடத்திலுள்ள வார்த்தையை விளக்கி சொல்லு (மத். 15: 21-28).

சத்தியன்: சரி, சரி அங்கே போவோம். அதாவது முதலில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இயேசு அந்த பெண்ணை நாய் என்று (நேரடியாகவோ, மறைமுகமாகவோ) சொல்லவில்லை.
அதாவது இயேசு யூதர்களின் பட்டணத்தில் ஊழியத்தை முடித்துவிட்டு, புறஜாதிகளின் பட்டணங்களாகிய தீரு, சீதோன் பட்டணங்களுக்கு செல்கிறார். அந்த வேளையில் தன் சீடர்களுக்கு ஒரு முக்கியமான பாடத்தைக் கற்பிக்க முனைகிறார். மேலும் தனது ஊழிய முன்னுரிமையான புறஜாதிகளுக்கான ஊழியத்தை விளக்க ஒரு உருவகத்தைப் பயன்படுத்துகிறார் என்பதுதான் உண்மை.
(அனைவரும்) ஓ...

சத்தியன்: கிரேக்க மொழியில் "*KUON*" (குவோன்) என்பது நாய். இந்த சொல் (லூக்கா 16:21, பிலி. 3:2) அதாவது யூதரல்லாதவர்கள் ஆன்மீக தன்மையற்றவர்கள் என்பதை குறிக்கும் சொல்.

இதை கவனமாக வாசித்தால் புரியும். யூதர்கள் புறஜாதிகள் தங்களைத் தீட்டுப்படுத்தக் கூடும் (யோவான் 18:28) என நம்பினர். இப்போது இந்த புறஜாதி பெண் தன் பிள்ளையின் சுகத்துக்காக ஓயாமல் தொந்தரவு செய்கிறாள், சீஷர்கள் எரிச்சல் அடைந்து, அகற்றும் என்று முறுமுறுகின்றனர். (இந்த *Situation*யை கொஞ்சம் யோசிங்களே) அதாவது பிதா குமாரனுக்கு கொடுத்த ஊழிய முன்னுரிமையை விளக்க வேண்டும் அதே நேரத்தில் யூதர்கள் அதை எப்படி எடுத்துக் கொள்கிறார்கள், புறஜாதியார் அதை எப்படி புரிந்துக் கொள்கிறார்கள் என்பது தான் இங்கு முக்கியம்.

*Highlight* என்னன்னா!! புறஜாதி பெண் நியாயமாக இயேசுவிடம் இருந்து எதிர்பார்க்காமல் தாழ்மையாய் எதிர்பார்த்தாள். உடனே இயேசு புறஜாதிகளைப் பற்றி சொன்ன வார்த்தையைக் கவனி. "இந்த விசுவாசம் பெரியது" பிள்ளைக்கு சுகமும் கிடைத்தது. யூதர்களுக்கு சொல்ல வேண்டியதையும் சுருக்கமாக சொல்லிவிட்டார்.

விஷயம்: அப்படின்னா தேவராஜ்யத்தில் நாய்கள் பிரவேசிக்காது (வெளி 22:15) என்று எழுதியிருக்கே.

ரகசியம்: அதுவா கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத நாய்களுக்கு இடமில்லை. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நமக்கு இடம் உண்டு. அதை தான் கானானுக்குள் சென்ற இரு நபர்கள் யோசுவா, காலேப் மூலம் தேவன் நமக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிட்டாரே.

சாதுரியன்: டேய் இப்பவாது புரியும்படி சொல்லுடா.

ரகசியம்: (சிரிச்சுக்கிட்டே...) டேய் காலேப் என்றால் நாய் என்று அர்த்தம். அதாவது யூதனான யோசுவாவும், புறஜாதியனான காலேப், அதாவது இவனை யூதா கோத்திரத்தின் வழியாக தேவன் தெரிந்து கொண்டார். யூத ராஜசிங்கம் இயேசுவின் வழியாக புறஜாதிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

சாதுரியன்: ஆமா காலேப் புறஜாதியான்னு சொல்லவே இல்லை.

ரகசியம்: நீ கேட்கவேயில்லையே (அனைவரும் சிரிப்பு)

சத்தியன்: டேய் விஷயம் உங்க வீட்ல நாய் இருக்குல

ரகசியம்: நீ நாய்னு சொல்லாத.

சாதுரியன்: நாயை நாயின்னு சொல்லாம எப்படிடா சொல்லணும்.

ரகசியம்: அது எங்க வீட்ல ஒரு ஆள் மாதிரி. அதுக்கு ஆதார் மட்டும் தான் கிடையாது.

சாதுரியன்: கவலைப்படாத முதல்ல மாட்டுக்கு ஆதார் கொண்டுவருவாங்க. பிறகு உங்க வீட்டு நாய்க்கும் ஆதார் கொடுத்திருவாங்க.

(அனைவரும் சாப்பிட்டு முடித்து சிரித்துக் கொண்டே சந்தியா மேட்டிற்கு புறப்பட்டனர்)





# எச்சரித்து ஆறுதல்படுத்தும் ஊழியம்

2nd WEEK MESSAGE

OT MISSION

Rev. Daniel Gnanapragasam

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, எசேக்கியேல் என்பவர் யார் என்று பார்க்கும் பொழுது பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் உள்ள பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவராக இவர் விளங்குகின்றார். இவருடைய காலகட்டம் பாபிலோனிய சிறையிருப்புக்கு முன்பு முதல் சிறையிருப்பில் இருந்த காலம் வரை என பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய சுமார் கி.மு. 622 - கி.மு. 517 என்று கூறப்படுகிறது. இவர் தன்னுடைய தீர்க்கதரிசன புத்தகத்தில் மூன்று விதங்களாக தீர்க்கதரிசனம் உரைக்கின்றார். அது என்னவெனில், முதலாவது ஆண்டவர் தன்னுடைய ஜனத்தின் சீர்கேட்டைக் கண்டித்து அவர்களுக்கு நினைவுக்கூறுகிறார். இரண்டாவது ஆண்டவர் தம்முடைய ஜனங்களை அடிமைப்படுத்தின பிற ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பளிக்கிறார். இறுதியாக பார்க்கும் பொழுது தம்முடைய ஜனங்களுக்கு தேவன் நம்பிக்கையின் வாக்குறுதியைக் கொடுக்கிறார். எசேக்கியேல் என்பதற்கு "தேவன் பலன் தருகிறார்" என்று அர்த்தம்.

எசேக்கியேலின் வாழ்விலே அவர் ஒரு ஆசாரியனாக அழைக்கப்பட்டு தன்னுடைய ஊழியத்தை செய்து கொண்டிருந்தார். அந்த காலகட்டத்தில் தேவன் அவரை அழைத்து தன்னுடைய ஜனங்களுக்கு அவருடைய வார்த்தையை அளித்து அவர்களை வழிநடத்தக் கூடிய தீர்க்கதரிசியாக அவர் எசேக்கியேலைப் பயன்படுத்தினார். இவருடைய காலகட்டத்தில் நேபுகாத்நேச்சார் எருசலேமை மூன்று கட்டங்களாக பிரிக்கின்றார். இந்த இரண்டாம் கட்டத்தில் தான் எசேக்கியேல் சிறைபிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு கொண்டு செல்லப்படுகின்றார். அங்கிருந்து தேவனுடைய தீர்க்கதரிசன ஊழியத்தை அவர் நிறைவேற்றுகிறார். எருசலேம் முழுவதுமாக அழிக்கப்படும் பொழுது யூதருக்கு அடையாளமாக இவருடைய மனைவி மரித்துப் போகிறார். இதற்குப் பின்பு தான் அவருடைய ஊழியத்தில் தேவன் அவரை வித்தியாசமான முறையிலே வழி நடத்துகின்றார்.

### நியாயம் தீர்க்கும் ஆண்டவர் (4-24 வரை):

இஸ்ரவேலர்கள் இரண்டு ராஜ்ஜியமாக பிளவுப்பட்டு இஸ்ரவேல், யூதா என்று பிரிந்தனர். இதில் யூத ஜனங்கள் எருசலேமில் இருக்கும் பொழுது துன்மார்க்கமாக வாழ்ந்து, விக்கிரக வழிபாடும் நடத்தி வந்தனர். இதைப் பார்த்த ஆண்டவர் அவர்களின் மீது கடும் கோபம் கொண்டு அவர்களைப் பாபிலோனுக்கு சிறையிருப்பாக அழைத்துச் செல்கிறார். அங்கு எசேக்கியாவைப் பயன்படுத்தி ஆண்டவர் ஜனங்களுக்கு அவர்களுடைய சீர்கேடான வாழ்வு குறித்து எச்சரித்து அதனால் வந்த விளைவுகளை அவர்களுக்கு சுட்டி காண்பிக்கின்றார். இதைத்தான் எசேக்கியேல் தன்னுடைய புத்தகத்தில் 4ஆம் அதிகாரம் முதல் 24ஆம் அதிகாரம் வரை கூறுகின்றார். இதில் அவர்கள் படப் போகிற பாடுகளையும் இன்னும் 70 ஆண்டுகள் சிறையிருப்பு இருப்பதையும் அவர் ஜனங்களுக்கு சுட்டிக் காண்பித்து அவர்களை மாறுபட்ட வழிக்கு நேராக அழைக்கின்றார். இந்தப் பகுதி மக்களை சீர்திருத்துவதற்கு ஏற்ற காரியங்களை அவர்களுக்கு குறிப்பிட்டு காண்பித்து அவரவர் குற்றத்திற்கு அவரவரே பொறுப்பில் இருக்க வேண்டும் என்பதையும் பிறர் மீது பழி போடாமல் இருக்க வேண்டும் என்பதையும் மைய கருத்தாக கொண்டு ஜனங்களை நல்வழிப்படுத்துகின்றார் எசேக்கியேல். இதனால் மக்கள் மன மாற்றம் அடைகின்றார்கள்.

### சிறைப்படுத்தின புறஜாதியாரின் மீதான நியாயத்தீர்ப்பு (25 முதல் - 32 வரை):

யூத ஜனங்கள் பிற ஜனத்தின் வழிபாட்டைப் பார்த்து அதன் மூலமாக கவரப்பட்டு அவர்கள் வாழ்வில் பெரிதான காரியங்களைச் செய்தனர். இது இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு மீட்சிக்குரிய நம்பிக்கையை அளிக்கத்தக்கதாக இந்தப் பகுதி அமைந்திருக்கின்றது. இப்பகுதியில் எசேக்கியேல் யூதாவை சுற்றியுள்ள நாடுகளாகிய அம்மோன் மற்றும் எகிப்து போன்ற சில நாடுகளை அவர் தண்டனைக்கு உள்ளாக தீர்க்கிறார். எசேக்கியேல் 25:2-7 வசனங்களில் அம்மோன் புத்திரரைத் தேவன் தண்டனைக்குள்ளாக தீர்ப்பதைப் பார்க்க முடியும். இதைப் போன்று எசேக்கியேல் 29:13-15 வசனங்களில் தேவன் எகிப்தை அழிப்பதையும், அதன் பெருமை முற்றிலுமாக தகர்க்கப்படுவதையும் அங்கே சுட்டிக்காட்டப்படுகின்றது. இப்படி சில காரியங்கள் மூலமாக தேவன் தன்னுடைய ஜனமாகிய யூதாவிற்கு சிறையிருப்பில் இருக்கும்போது நம்பிக்கையை அளிக்கின்றார்.

### வாக்குறுதிகள் மூலம் பலப்படுத்தும் ஆண்டவர் ( 33 - 48)

இங்கே நாம் எசேக்கியேலின் கற்பனை நேயத்தைப் பார்க்கலாம். உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்று எழுவதை இந்த இடத்திலே அவர் ஒரு உவமையாக சுட்டிக்காட்டுகிறார். உடைக்கப்பட்ட மற்றும் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலர் அனைவரும் ஒன்று சேர்க்கப்பட்டு மறுமலர்ச்சியின் வாழ்விலே இணைந்து வாழ்வோம் என்று சொல்லி ஒரு நம்பிக்கையின் வாக்குறுதியை கொடுக்கின்றார். இதில் அழிக்கப்பட்ட எருசலேம் மீண்டும் கட்டப்பட்டு, மக்கள் மகிழ்ச்சியோடு ஆண்டவரை ஆராதித்து, தேவன் விரும்புகின்ற வழியில் நடக்க அவர்களை வழி நடத்துகின்றார் என்பதை இந்த பகுதி சுட்டிக்காட்டுகிறது. இதற்கு ஆதாரமாக எடுக்க வேண்டுமானால் எசேக்கியேல் 36 : 24-26இல் உள்ள வசனங்கள் தேவன் யூதாவைச் சீர்படுத்தி அவர்களைக் கழுவி பரிசுத்தப்படுத்தி தனக்கேற்ற ஜனமாய் அவர்களை மாற்றுவதை இந்த இடத்திலே நாம் பார்க்க முடியும். அவர்களை மீட்பின் பாதையில் நடத்துவதை அவர் குறிப்பிடுகின்றார். இது ஜனங்களை புத்துணர்வு அடைய செய்து அவர்கள் ஏன் மாற வேண்டும் என்பதற்கான காரியங்களை அவர்களுக்கு தெளிவுபடுத்தி காட்டி நேர்வழியில் அவர்களை நடத்தி நம்பிக்கையின் வாக்குறுதியைத் தீர்க்கதரிசிகள் மூலமாக தேவன் இப்புத்தகத்திலே தெளிவாக எடுத்துரைக்கின்றார். இது மக்களை மறுவாழ்வுக்கு நேராக வழி நடத்தி அவர்கள் என்ன செய்ய வேண்டும், எவைகளைச் செய்யக்கூடாது என்பதை சுட்டிக்காட்டி, தேவன் அவர்களோடு இருக்கின்றார் என்பதையும் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

ஆம் கிறிஸ்துவுக்கு பிரியமானவர்களே! இந்த புத்தகத்தை பொறுத்த வரையில் தேவன் ஜனங்களை தண்டிக்கிறவர் மாத்திரமல்ல, எப்பொழுதெல்லாம் வழித் தப்பிப் போகிறார்களோ அப்பொழுதெல்லாம் அவர்களை நேர்வழியில் நடத்தி நம்பிக்கையின் வாக்குறுதிகள் மூலமாக பலப்படுத்தி தேற்றி வழி நடத்துகின்ற தேவனாய் இருக்கின்றார். இப்படி நம் மீது கரிசனை உள்ள தேவனுக்கு நாம் உண்மையுள்ள பாத்திரமாக, உலக மாயையை விட்டு விலகி அவரோடு இணைய நம்முடைய வாழ்வை அர்ப்பணிப்போம். இறை அரசோடு இணைந்து செயல்படுவதற்கு தேவன் நமக்கு பெலனைத் தர வேண்டும் என்று ஜெபிப்போம். தேவன் நம் மூலமாய் செய்ய வேண்டிய காரியங்களை நேர்த்தியும், செம்மையுமாக செய்வாராக. **"நானே தேவன்"** என்று அறியும்படி இவைகளைச் செய்வேன்" என்கின்றார் ஆண்டவர். ஆமென்.

# நான் ஏன் வேறு மதத்தவரை திருமணம் செய்து கொள்ளக்கூடாது?

Mrs. Jeba Saral

Hello Chellams, எல்லாரும் எப்படி இருக்கீங்க? நல்லா இருக்கீங்களா? இந்த மாதம் ஸ்கூல் திறந்திருச்சு. எல்லாருக்கும் 'All the best'. நீங்க ஒவ்வொருத்தரும் நல்லா படிச்சு ஆண்டவருடைய நாமத்துக்கு மகிமை கொண்டுவர உங்களுக்காக நான் தேவனை நோக்கி ஜெபிக்கிறேன். ஆண்டவர் உங்களுக்கு எல்லா காரியத்திலும் புத்தியைத் தந்தருள்வாராக. இந்த மாதம் வேறு மதத்தினரை நான் ஏன் திருமணம் செய்யக்கூடாது? என்ற கேள்விக்கான பதிலை நாம் கண்டுபிடிப்போம். முதலாவது, திருமணம் என்றால் என்ன? பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் திருமணம் என்பது தேவனால் ஏற்படுத்தின பந்தம் மற்றும் பரிசுத்த சந்ததியைப் பெற்றெடுக்க தேவன் அமைத்த ஒரு உறவு. இப்போது நீ சொல் நண்பா!! இக்காரணத்திற்காகவா உன்னை, வேறு மதத்தை சேர்ந்த ஒரு ஆணோ பெண்ணோ திருமணம் செய்து கொள்வார்கள்? கண்டிப்பாக இல்லை, இல்லவே இல்லை. அடுத்ததாக திருமணத்தில் இருமனம் ஒரு மனம் ஆகிறது என்று கூறுகிறோம். இவ்வாறு இருக்கிற பட்சத்தில், நீ வேறு மதத்தினரை திருமணம் செய்து கொண்டால், நீயும் ஒரு மனதோடு, உன் தேவனை தள்ளிவிட்டு, அந்நிய தேவர்களுக்கு உன்னை விற்று போட்டது போல தானே இருக்கும்??? மூன்றாவதாக உன் அம்மா, அப்பா இருவரும் கிறிஸ்தவர்களாக இருக்கும் பொழுதே பிள்ளைகள் தேவனை மறந்து, பல நேரங்களில் பரிசுத்த வாழ்க்கை வாழ திண்டாடுகின்றனர். இப்பொழுது நீ வேறு மதத்தினரை திருமணம் செய்யும்பொழுது உன் பிள்ளைகளின் நிலைமையை சற்று யோசித்துப் பார். உனக்காகவோ, உன் ஆசை இச்சைகளுக்காகவோ இப்பெரும் பாவத்தில் நீ விழுந்து விடாதே!! என்று பரிசுத்த வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது.

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?" (2 கொரி. 6:14-15) என்று தேவன் இப்படியாக மிகவும் அருவருக்கக்கூடிய ஒரு பாவமாகிய வேசித்தனத்தில் நீ விழுந்து விடாதே!! அதை சீ என்று வெறுத்து உதறி தள்ளிவிட்டு உன் தேவனிடத்தில் வந்து விடு!! இல்லை அக்கா எனக்கு அவளை அல்லது அவரை ரொம்ப பிடித்து விட்டது; அன்பு, அழகு, அந்தஸ்து, நல்ல குணம், கல்வி, நல்ல சம்பளம் என்று நான் எதிர்பார்த்த எல்லாம் அவரிடம் இருக்கிறது என்று நீ சொல்வாயானால், வேண்டுமானால் உன் திருமண வாழ்வில் நீ வெற்றி பெறலாம். ஆனால் தேவன் நியமித்த பரிசுத்த வாழ்க்கையில் நீயும் தோற்றுவிடுவாய், உனக்கு பின்வரும் சந்ததியும் தோற்றவர்களாகவே காணப்படுவர்.

அதனால் தேவன் கொடுக்கும் இந்த சாயலில் நீ ஒரு தெய்வப் பிள்ளைக்கே காத்திருந்து, உன் வாழ்க்கை துணையாக ஏற்றுக்கொள். மற்றபடி நீ விரும்பின வகைகள் எல்லாம் அவர்களிடம் இருந்தாலும் அவர் தேவனின் பிள்ளையாக இல்லாமல் வேறு மதத்தவராக இருந்தால் அவரை நிச்சயம் நீ உன் துணையாக ஏற்றுக் கொள்ளாதே!! வேறு மாற்றுக் கருத்துக்கள் இல்லை!! நீ அவரை நிச்சயம் ஆதாயப்படுத்திக் கொள்ள முடியாது!! முன்னோர்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, தாவீது போன்றோர் தேவனுடைய பிள்ளைகளையே தங்கள் வாழ்க்கை துணையாக தெரிந்தெடுக்க முன்னுரிமை கொடுத்தனர். அதுபோல நாமும் அவர்களுடைய அடிச்சுவடுகளை பின்பற்றுவோம், தேவனுடைய பிள்ளைகளாய் பரிசுத்த சந்ததியை தேவனுக்காக எழுப்புவோம். ஆமென்!



# ஹிமாச்சலப் பிரதேசம்

FIELD - FMPB
Mrs. Vasanthi Emmanuel

“பனிமுடிய நிலம்” எனப் பொருள்படும் ஹிமாச்சலப் பிரதேசம் (தேவதைகளின் பூமி) “தேவ் பூமி” என்றும் அழைக்கப்படுகிறது. உயரமான மலைத்தொடர்களையும், அடுக்கடுக்கான ஊசி மரங்களையும் கொண்டது ஹிமாச்சல். சட்லெஜ், ராவி, பியாஸ் போன்ற நதிகள் இம்மலைத் தொடர்களிலிருந்து உருவாகி விவசாயத்தை மேம்படுத்துவதோடு, மின் உற்பத்திக்கும் வழிவகுக்கிறது.

ஆப்பிள் உற்பத்திக்கு பெயர் பெற்ற இம்மாநிலத்திற்கு அதனை அறிமுகம் செய்தவர் அமெரிக்க பாப்திஸ்ட் மிஷனெரி அருள்திரு. சாமுவேல் ஸ்டோக்ஸ் என்பவர். நம் நாட்டில் விளையும் ஆப்பிளில் 60% இம்மாநிலத்திலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. இம்மாநிலத்தில் சுமார் 2000க்கும் அதிகமான இந்துக் கோவில்களும், 24க்கும் அதிகமான பிரசித்தி பெற்ற புண்ணிய ஸ்தலங்களும் உள்ளன. 13க்கும் அதிகமான பிரசித்தி பெற்ற புத்த கோயில்கள், மடாலயங்கள் உள்ளன. சீக்கிய மதத்தின் குருத்துவாராக்களும் உண்டு. 19ஆம் நூற்றாண்டில் சாது சுந்தர்சிங் கோட்கரில் இம்மக்களின் இரட்சிப்புக்காக 40 நாட்கள் உபவாசித்து ஜெபித்த குகையை இன்றும் காணலாம்.

## நமது ஊழியம்:

1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முன்னோடி ஊழியர்களான அருள்திரு. பொன்னுசாமி மற்றும் அருள்திரு. தேவவரம் அவர்களால் இம்மாநிலத்தில் ஊழியம் செய்ய கள ஆய்வு செய்யப்பட்டது. ஹமீர்பூர் பகுதியில் முதல் பணித்தளம் ஆரம்பிக்கப்பட்டது. ஆகஸ்ட் மாதம் 1991ஆம் ஆண்டு 6 பேர் திருமுழுக்கு பெற்றனர். 1993ஆம் ஆண்டு எதிர்ப்புகள் ஏற்பட ஆரம்பித்தது. 1995ஆம் ஆண்டு ராம்பூர் பகுதியில் கள ஆய்வு செய்யப்பட்டு 19.10.1995ஆம் ஆண்டு 2 மிஷனெரிகள் அனுப்பப்பட்டனர். மின் உற்பத்தித் திட்டத்தில் பணி செய்யும் புலம்பெயர் தொழிலாளர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. நல்ல வரவேற்பு கிடைக்கவே 1999ஆம் ஆண்டு ரிக்காங்பியோ பணித்தளம் திறக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை தேவன் புதிய பணித்தளங்களை அமைத்து ஆத்துமாக்களை தந்து வருகிறார்.

## பணித்தளங்களின் ஆசீர்வாதங்கள்:

| | |
|---|---|
| சந்தித்து வரும் மக்களினங்கள் | - 4 |
| ஊழியம் செய்யும் மாவட்டங்கள் | - 4 |
| பணித்தளங்கள் | - 8 |
| பணி செய்யும் ஊழியர்கள் | - 9 குடும்பங்கள் |
| சுதேச ஊழியர்கள் | - 10 |
| தன்னார்வலர்கள் | - 3 |
| சபைகள் | - 29 |
| கட்டப்பட்டுள்ள ஆலயங்கள் | - 4 |
| மறுமலர்ச்சி பெற்றோர் | - 5618 பேர் |



## ஜெபிக்க:

- மூடநம்பிக்கை, குரு வணக்கங்கள் மற்றும் கிராம குல தெய்வங்களை வழிபடும் இவர்களின் மனக்கண்கள் திறக்கப்பட்டு, கிறிஸ்துவை அறிந்து கொள்ள
- கடுமையான பனிப் பொழிவு, பனிச்சரிவு, நிலச்சரிவு, மேக வெடிப்பு, ஆற்றுப்பெருக்கு மற்றும் பூமி அதிர்ச்சி போன்ற இயற்கை பேரழிவுகளிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட
- போதைப்பழக்கம், விபச்சாரம், தவறான பொழுதுபோக்கு போன்ற சமுதாய சீர்கேடுகளிலிருந்து இளைஞர்கள் விடுதலை பெற
- மதமாற்றத் தடைச் சட்டம் முற்றிலும் நீக்கப்பட, மக்கள் விடுதலையோடு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, ஆராதிக்க
- கடும் எதிர்ப்புகளை சந்தித்து வரும் நம் விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்க, ஊழியங்கள் தொடர்ந்து நடைபெற
- இம்மாநிலத்தில் உள்ள 20,690 கிராமங்களிலும் சுவிசேஷத்திற்கு வாசல்கள் திறக்கப்பட, சபைகள் எழும்ப
- இம்மக்கள் பேசும் மொழிகளில் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட
- ஒவ்வொரு விசுவாசியும் இரட்சிக்கப்படாத தங்கள் குடும்ப அங்கத்தினர் மற்றும் உறவினர் 5 பேருக்காக தினமும் ஜெபித்து, அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்த, அறிமுகப்படுத்தப்பட்டுள்ள “ஐந்து விரல் ஜெபம்” விசுவாசிகளால் செயல்படுத்தப்பட ஜெபிப்போம்.

Ms. Beulah Baskar



## பச்சை சட்டைகள்

# பாகிஸ்தான்

பாகிஸ்தான் என்பது தெற்காசியாவில் உள்ள நாடாகும். இது அதிகாரப்பூர்வமாக “இஸ்லாமியக் குடியரசு” என்று அழைக்கப்படுகிறது. அவர்களின் தேசியக் கொடியின் பச்சை நிறம் காரணமாக, “பச்சை சட்டைகள்” என்று குறிப்பிடப்படுகிறது. 24.15 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட இந்நாடு உலகின் மிக அதிக மக்கள் தொகையுடைய ஐந்தாவது நாடாக திகழ்கிறது.

**தலைநகரம்:**

இஸ்லாமாபாத், ஆட்சி மொழிகள்: உருது, ஆங்கிலம், சுற்றுலா தளங்கள்: லாகூர் கோட்டை மற்றும் அருங்காட்சியகம், மொஹென்ஜோதாரோ, ஷாலிமார் பூங்கா, மினார் - ஏ பாகிஸ்தான் மற்றும் பல மசூதிகள்.

**புவியியல்:**

பாகிஸ்தான் தெற்காசியாவில் அமைந்துள்ளது, ஈரான், ஆப்கானிஸ்தான், சீனா மற்றும் இந்தியாவை எல்லையாகக் கொண்டுள்ளது. இது பெரிய இந்தோ-கங்கை சமவெளியின் மேற்கு முனையில் உள்ளது. நாட்டின் அமைவிடம் கிழக்கு மற்றும் மேற்கு இடையேயான வர்த்தகம் மற்றும் கலாச்சார பரிமாற்றத்திற்கான ஒரு குறுக்கு வழியில் அமைகிறது.

**கலாச்சாரம்:**

பாகிஸ்தானின் கலாச்சாரம் மற்றும் மத சூழலில் பச்சை நிறம் குறிப்பிடத்தக்கது. இது இஸ்லாமியத்தையும் பெரும்பான்மையான முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மத்திய ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியாவின் சந்திப்பில் அதன் இருப்பிடத்தால் நாட்டின் கலாச்சார அடையாளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக பல்வேறு மொழிகள், உணவு வகைகள், உடைகள், இசை, கலை மற்றும் திருவிழாக்கள் ஆகியவை அடங்கும்.

**வரலாற்று நிகழ்வுகள்:**

பாகிஸ்தானின் வரலாறு, தற்போதைய பாகிஸ்தான் பகுதியில் வாழ்ந்த நாகரிகங்கள், காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள், பிரிவினை மற்றும் சுதந்திரம் ஆகிய நிகழ்வுகளைப் பற்றியது. சிந்து வெளி நாகரிகம் முதல் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் பாகிஸ்தான் நிலப்பகுதி, பின்னர் இந்தியப் பிரிவினை மற்றும் பாகிஸ்தான் உருவாவதற்கான போராட்டங்கள் என பாகிஸ்தானின் வரலாறு விரிவாகப் பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ கி.மு. 3300இல் சிந்து ஆற்றுப் பகுதியில் சிந்துவெளி நாகரிகம் உருவானது. இந்த நாகரிகம், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவின் சில பகுதிகளில் பரவியிருந்தது. 1893இல் தற்போதைய பாகிஸ்தான் நிலப்பகுதி பிரிட்டிஷ் இந்தியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. 1947 வரை இது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது. இந்தியப் பிரிவினையின் போது முஸ்லீம் லீக் தனி நாடு கோரிப் போராடியது. 1940இல் முஸ்லீம் லீக் பாகிஸ்தான் தனிநாடு கோரி தீர்மானம் நிறைவேற்றியது. 1946இல், இந்திய சுதந்திரம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகி, முஸ்லீம் லீக் போராட்டங்களைத் தொடங்கியது. 1947இல், இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டு நாடுகள் உருவாயின.

**ஜெபக்குறிப்பு:**

✦ பாகிஸ்தானின் எல்லைப் பகுதிகளில், இந்தியா, ஆப்கானிஸ்தான், ஈரான், சீனா ஆகிய நாடுகளுடன் எல்லைப் பிரச்சனைகள் இருந்துள்ளன. குறிப்பாக காஷ்மீர் பிராந்தியம், இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையில் ஒரு பெரிய மோதல் இன்று வரை காணப்படுகிறது. இந்நிலை மாறி அமைதி நிலவ ஜெபிப்போம்.

✦ பல தீவிரவாத இயக்கங்களுக்கும், தீவிரவாதிகளுக்கும் அடைக்கலப் பட்டணமாக இருக்கும் இத்தேசம் தீவிரவாதத்தை ஊக்குவிக்காமல் தன் சொந்த ஜனங்களைப் பாதுகாக்கவும், தற்போது நடந்த போரினால் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்யவும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் ஜெபிப்போம்.

✦ இங்கு பெரும்பான்மை மதமாக கருதப்படுவது இஸ்லாம். இதை தேசிய மதம் என்றே கூறலாம், ஏனெனில் மொத்த ஜனத்தொகையில் 96.35% மக்கள் இஸ்லாமியர். 1.37% ஆக இருக்கும் கிறிஸ்தவர்கள் பல வழிகளில் துன்புறுத்தல்களுக்கு ஆளாகிறார்கள். அங்கு வாழும் கிறிஸ்தவர்களின் பாதுகாப்பிற்கும், பிற சிறுபான்மை மதத்தினரின் பாதுகாப்பிற்கும், இத்தேச மக்களுக்கு சுவிசேஷம் கொண்டு செல்லப்படவும், சுவிசேஷத்திற்கு வாசல்கள் திறக்கப்படவும், இத்தேச மக்கள் கர்த்தரே தேவன் என்று அறிந்து, அறிக்கையிடவும் ஜெபிப்போம்.

# மிஷனெரி பணியில் நம் கால மனிதர்

# REV. S. RAVIKUMAR





### பூர்வீகம்:

தூத்துக்குடி மாவட்டம் CMS மிஷனெரி ரேனியஸ் ஐயர் அவர்களால் துவங்கப்பட்டு கனம் ஜாண்தாமஸ் ஐயர் அவர்களால் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ கிராமம் மெஞ்ஞானபுரம். இதற்கு பக்கத்திலுள்ள ஒரு குட்டி கிராமம் தான் அடைக்கலாபுரம். நான்காம் வகுப்பு முதல் மெஞ்ஞானபுரம் TDTA ஆரம்ப பள்ளியிலும் பின் அம்புரோஸ் மேல்நிலைப் பள்ளியிலும் படிக்க வைக்கப்பட்டேன்.

### இரட்சிப்பின் அனுபவம்:

எட்டாம் வகுப்பு படிக்கும் போது புதிய ஏற்பாடு எல்லோருக்கும் இலவசமாக கொடுக்கப்பட்டது. மத்தேயு தொடங்கி தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தேன். அப். 17:29 வாசிக்கும்போது நாம் தேவனுடைய சந்ததியராயிருக்க மனிதனால் உண்டாக்கப்பட்டவைகள் தெய்வமாக முடியாது என எழுதப்பட்டிருந்தது. எனக்குள் ஒரு பெரிய அதிர்ச்சி ஏனென்றால் எங்கள் ஊரில் மட்டும் ஏழு கோயில்கள் உண்டு. எனக்குள் முதல் முறையாக ஒரு கேள்வி வந்தது. மனிதன் கடவுளைப் படைத்தானா? அல்லது கடவுள் மனிதனைப் படைத்தானா?

தொடர்ந்து வாசித்தபோது தெளிவு ஏற்பட்டது. தனியாக குளத்திலுள்ள தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள முள் மரத்தடியில் ஜெபிப்பதுண்டு. ஒருமுறை அப்படி நான் ஜெபிக்கும் போது, நான் சிறு வயதில் திருடியது, பொய் சொன்னது என அனைத்தும் ஞாபகம் வந்தது. உடனே அவற்றையெல்லாம் அறிக்கையிட்டு கண்ணீரோடு ஜெபித்தேன். இந்த ஜெபத்திற்கு பின் ஒரு தெய்வீக சமாதானத்தை உணர்ந்தேன்.

### ஊழிய அழைப்பு:

இந்த காலகட்டத்தில் தான் வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் IMS விற்பனை விழா நடந்தது. இதில் ஒரிசா மாநிலத்தில் உள்ள லம்பாடி, போண்டா போன்ற மக்களைப் பற்றி சொன்னார்கள். அவர்களது உடை, அணிகலன்களைக் காட்டினார்கள். கூட்ட முடிவில், ஆண்டவரே! இதுபோன்ற பரம ஏழைகளுக்கு நான் சேவை செய்ய வேண்டும் என்று ஜெபித்தேன். 12ஆம் வகுப்பு ரிசல்ட் வந்ததும், 8ஆம் வகுப்பில் நடந்த யோசனை எனக்கு ஞாபகம் வந்தது. ஏழை மக்களுக்கு சேவை செய்ய விரும்பியதால் மருத்துவ கல்வியை கற்க விரும்பினேன். D.Pharmacy படிக்க தேவன் உதவி செய்தார். 1993ஆம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மாநில முகாமுக்கு மெஞ்ஞானபுரம் ஜெபக்குழு தலைவர் I. D. பாக்யராஜ் அய்யா அவர்கள் அழைத்துச் சென்றார்கள். அங்கு முழு நேரப் பணிக்கென்று அழைப்பு கொடுக்கப்பட்டபோது நானும் ஒப்புக்கொடுத்தேன். வீட்டிற்கு தெரியாமல் நேர்முகத்தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு நவநீதர் அண்ணனோடு சுவிசேஷ ரதம் ஊழியத்தில் இணைந்தேன். மே 1994இல் பெற்றோரைச் சந்திக்க சென்றேன். மாலை நான் அங்கிருந்து புறப்பட்டபோது அம்மா என் கையைப் பிடித்துக் கொண்டார்கள். இப்போது எனக்கு ஒரு மில்லியன் டாலர் கேள்வி? பெற்றோருக்குக் கீழ்ப்படிவதா? கடவுளுக்கு கீழ்ப்படிவதா? எங்கோ படித்த ஞாபகம் மனதில் வந்தது. "தன் தகப்பனையாகிலும் என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல! இப்போது தெளிவு பிறந்து கையை உதறி விட்டு ஓட ஆரம்பித்தேன்.

### ஜார்க்கண்ட் ஊழியம்:

பின் ஓராண்டு BBI வேதாகம பயிற்சிக்கு பின் ஜார்கண்ட்க்கு (அன்றைய தென் பீகார்) அனுப்பப்பட்டேன். மால்தோ மக்கள் மத்தியில் மருத்துவ குழுவாக ஊழியத்தைத் துவங்கினோம். இரவு நேரங்களில் ஆவிக்குரிய கூட்டம், பகலில் சுகாதாரத் தன்னார்வலர்களுக்கான பயிற்சி என ஊழியம் தொடர்ந்தது. பாடல்கள் மற்றும் நாடகம் மூலமாக மலேரியா, காலரா போன்ற வியாதிகளுக்கான விழிப்புணர்வு ஊழியம் செய்தோம்.

### மஹாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேசம் ஊழியம்:

1998இல் திருமணம் நடந்தது. மனைவிக்கு ஏற்பட்ட சுகவீனத்தினிமித்தம் 3 ஆண்டுகள் திருநெல்வேலியில் விரிவாக்க பணி ஊழியம் செய்தோம். ஆலய நிழலிலேயே அதிகம் இருக்க விரும்பாததால் 2021இல் மஹாராஷ்டிரா மாநிலம் நவாப்பூர் மற்றும் போராடி விடுதிகளில் ஊழியம் செய்தோம். தலைமைத்துவ பயிற்சி மற்றும் OTC என அழைக்கப்படும் 6 மாத வேதாகம கல்லூரி ஊழியத்தையும் செய்து வந்தோம். 2008 முதல் மத்திய பிரதேசம் பான்செமல் என்ற பணித்தளத்தில் பாவ்ரா மக்கள் மத்தியில் சபை நாட்டும் ஊழியம் செய்தோம்.

### விரிவாக்கப்பணி:

மறுபடியும் மனைவியின் சுகவீனத்தினிமித்தம் 2016இல் தமிழ்நாட்டுக்கு மாறுதல் பெற்றோம். 5 ஆண்டுகள் சென்னையில் மத்திய சென்னை பிராந்தியத்தில் ஊழியம் செய்தோம். 2023 முதல் சேலத்தை மையமாகக் கொண்டு மேற்கு மண்டல செயலராக பணி செய்து வருகிறோம்.

### ஜெபிக்க:

- ♥ மேற்கு மண்டல பகுதியில் அதிகமான வாலிப ஜெபக்குழுக்கள் உருவாக, வாலிபர்கள் தலைவர்களாக எழும்ப ஜெபிப்போம்.
- ♥ அக்காவின் சுகத்திற்காக மற்றும் அண்ணனின் பிரயாணங்கள் மற்றும் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

**கல்லை கடவுளாக கொண்டவன், கல்வாரியை கண்டதால் சிலுவை சுமக்க துணிந்தான்.**
**ஆலயத்தின் வாசலிலேயே வாழும் நீ, அறியாதோர்க்கு ஆலயங்கள் எழுப்ப எப்போது வருவாய்?**

# பெருமூளை வாத நோய்



பெருமூளை வாதம் என்பது குழந்தைப் பருவத்தில் தோன்றும் நிரந்தர பெருமூளை பாதிப்பாகும். இது தசைகள், இயக்கம் மற்றும் தோரணை ஆகியவற்றை பாதிக்கிறது. இது பெரும்பாலும் கர்ப்பக் காலத்தில் (பிறப்பதற்கு முன்) நோய்த்தொற்றுகள், ஆக்ஸிஜன் பற்றாக்குறை (பிறப்பின் போது), குழந்தை பருவத்தில் (பிறப்புக்குப் பிறகு) தலையில் ஏற்படும் அதிர்ச்சிகரமான காயம் அல்லது மரபணு நிலைமைகள் காரணமாக வளரும் மூளைக்கு ஏற்படும் சேதத்தால் ஏற்படுகிறது. பல்வேறு வகையான பெருமூளை வாதக்கோளாறுகள் உள்ளது. இதில் மிகவும் பொதுவானது Spastic CP ஆகும். இது தசை விறைப்பு மற்றும் இறுக்கத்தைக் கொண்டுள்ளது. Dyskinetic CP தன்னிச்சையான இயக்கங்களைக் கொண்டுள்ளது. Ataxic CP மோசமான ஒருங்கிணைப்பு மற்றும் சமநிலையைக் கொண்டுள்ளது. இறுதியாக Mixed CP மேற்கூறிய அனைத்து வகைகளின் கலவையாக உள்ளது.

வேறு சில அறிகுறிகளாவன: குழந்தை பருவத்தில் வளர்ச்சி தாமதம், குறிப்பாக உட்காருதல், ஊர்ந்து செல்வது, நடப்பதில் தாமதம், பேச்சு மற்றும் விழுங்குவதில் சிரமம் ஆகியவை. பெருமூளை வாதத்தால் மூளையில் ஏற்பட்ட பாதிப்பு காலப்போக்கில் மோசமடையாது. ஆனால் பெருமூளைவாத பாதிப்பினால் வந்த அறிகுறிகள் அதற்கு தகுந்த சிகிச்சை அளிக்காவிட்டால் காலப்போக்கில் மோசமடையக்கூடும்.

மூளையில் ஏற்பட்ட பாதிப்பு நிரந்தரமானது என்பதால் எந்த சிகிச்சையினாலும் இதை சரிசெய்ய இயலாது. ஆனால் ஆரம்ப காலத்திலேயே இயன் முறை மருத்துவம் (இயக்கம் மற்றும் சமநிலை), தொழில் முறை சிகிச்சை (அன்றாட நடவடிக்கைகளில் உதவி செய்ய), பேச்சு பயிற்சி (பேச்சு மற்றும் விழுங்குதல் பிரச்சினைகளுக்கு உதவ), மருந்துகள் (தசை பிடிப்பு அல்லது வலிப்புத் தாக்கங்கள் நீங்க), அறுவை சிகிச்சை (இயக்கத்தை மேம்படுத்த அல்லது தசை இறுக்கத்தை குறைக்க), உதவி சாதனங்கள் (பிரேஸ்கள், வாக்கர்கள் அல்லது சக்கர நாற்காலிகள்) போன்றவை அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவும்.

இங்கிலாந்தின் கார் பந்தய ஓட்டுநரான நிக்கோலஸ் கார்ல் ஹாமில்டன் (Nicolas Carl Hamilton). இவரது 18வது வயதில் ஸ்பாஸ்டிக் டைபிலிஜியா என்ற வகை பெருமூளை வாதம் (Spastic Diplegia Cerebral Palsy) இருப்பது கண்டறியப்பட்டது. இவர் ஒரு குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தை. அதாவது 2 மாதங்களுக்கு முன்பே பிறந்துவிட்டார், அவர் பிறந்த முதல் 6 வாரங்கள் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார். நிக்கோலஸ், குறைபாட்டோடு இருந்தபோதிலும், மோட்டார்ஸ்போர்ட் குறித்த தனது கனவுகளைப் அவர் விடவில்லை. மேலும் பிரிட்டிஷ் டூர் கார் சாம்பியன்ஷிப்பில் போட்டியிட்டு பிரபலமான ரேஸ் கார் டிரைவர் ஆனார்.

## புள்ளிவிவரங்கள்:

- இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு 1,000 குழந்தைகளில் சராசரியாக, சுமார் 2.95 முதல் 3 பேர் இந்த நோயால் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது.
- நகர்ப்புறங்கள்: 1,000 குழந்தைகளுக்கு 2.29 பேர் இந்த நோயால் பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.
- கிராமப்புறங்கள்: 1,000 குழந்தைகளுக்கு 1.83 பேர் இந்த நோயால் பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

## ஜெபிக்க:

- பெருமூளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் இயக்கத்திற்கு தேவையான வலிமை, வலியை பொறுத்துக் கொள்கிற சகிப்புத்தன்மை மற்றும் தங்கள் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துகிற திறன் மேம்பட ஜெபிப்போம்.
- இவர்களின் பெற்றோர், உடன்பிறப்புகள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு தேவன் ஞானத்தையும், பொறுமையையும் தர ஜெபிப்போம்.
- பெருமூளை வாதம் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டு பதட்டத்தோடும், மனச்சோர்வோடும் இருப்பவர்களுக்காக ஜெபிப்போம்.
- பெருமூளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களை இச்சமூகம் ஏற்றுக்கொள்ளவும், அவர்களை மதிக்கவும், அவர்களிடம் இரக்கமுள்ளவர்களாக இருக்கவும் ஜெபிப்போம்.
- இவர்களுக்கு தேவையான கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் கிடைக்க ஜெபிப்போம்.
- பெருமூளை வாதம் உள்ளவர்களின் இயக்கம், தகவல் தொடர்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக்கூடிய தொடர்ச்சியான மருத்துவ ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக ஜெபிப்போம்.



Mrs & Mr. Godwin

# பரகையா மக்கள்

பரகையா என்றால் “காடுகளை எரிப்பவர்கள்” அல்லது “காட்டுவாசிகள்” என்று பொருள். பரகையா மக்கள் ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள லத்தேகார் மற்றும் பலமு மாவட்டத்திலும், உத்திரப்பிரதேசத்தில் உள்ள சோன்பத்ரா மாவட்டத்திலும் சுமார் 35,000 பேர் வாழ்கிறார்கள்.

**வாழ்வாதாரம்:**

பாரம்பரியமாக இம்மக்கள் வனத்தையே நம்பி வாழ்ந்துள்ளனர். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நிலங்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டது. காட்டுப் பொருள்களை சேகரிப்பது, குறிப்பாக வேர்கள், பழங்கள், இலைகள் போன்றவற்றை சேகரித்து அவைகளை உள்ளூர் சந்தையில் விற்பது இவர்களது பிரதானத் தொழில். அதோடு கூட வேட்டையாடுதலையும் தொழிலாகக் கொண்டுள்ளனர். ஆனால் அரசாங்கம் இந்த உரிமைகளை இவர்களிடமிருந்து பறித்துவிட்டது.

**மத நம்பிக்கை:**

பரகையா மக்கள் “சரனா” என்ற மத நம்பிக்கை கொண்டவர்கள். இதன்படி ஆவி வணக்கம் மற்றும் இயற்கையை வழிபடுகின்றனர். தர்திமதா மற்றும் ஜுவாலமுகி போன்ற ஆதிவாசி தேவதைகளையும் மற்றும் இந்து தேவ தேவதைகளையும் வழிபடுகின்றனர். “மாகே பர்ப்” என்ற பண்டிகையை மிகவும் உல்லாசமாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களில் 0.77% மட்டுமே கிறிஸ்தவர்கள்.

**புலம் பெயர்தல்:**

மழைக்காலங்களில் விவசாயம் செய்கின்றனர். தீபாவளிக்குப் பிந்தைய காலங்களான நவம்பர் முதல் ஜூன் வரை ஏழு மாதங்களில் 73% மக்கள் புலம்பெயர் தொழிலாளர்களாகவும், செங்கல் சூளை தொழிலாளர்களாகவும், கட்டுமான தொழிலாளர்களாகவும் அண்டை மாநிலங்களுக்கு பயணிக்கின்றனர். “தாதன்” என்றால் பெர்சிய மொழியில் கொடு என்று அர்த்தம். பரகையா மக்கள் தங்கள் பகுதியில் உள்ள காண்ட்ராக்டர்களிடம் சென்று தாதன் (கடன்) வாங்குகிறார்கள். அதற்கு பதிலாக பனாரஸ், பட்னா, திரிபுரா போன்ற பகுதிகளிலுள்ள செங்கல் சூளைகளில் கொத்தடிமைகளாக வேலைக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

**கல்வி:**

“புலம்பெயர்வுக்குப் பின் பள்ளிக்கு வரும் குழந்தைகள் கல்வியில் தடம் புரண்ட நிலையிலேயே இருப்பார்கள். கடந்த 20 ஆண்டுகால என்னுடைய கல்விப் பணியில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் பத்தாம் வகுப்பு தாண்டி இருக்கிறாள்” என்று அரசு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் நிஷா குமாரி பகிர்ந்து கொள்கிறார்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்கள்:**

கடந்த 2016 முதல் ஜார்கண்ட் மாநிலம் பலமு பணித்தளத்தில் ஊழியம் நடைபெறுகிறது, பார்வக்ஹட் என்ற சபையில் ஒரு குடும்பமும், பிக்ரா என்ற கிராமத்தில் ஒரு குடும்பமும் தேவனை ஆராதித்து வருகிறார்கள்.

**ஜெபியுங்கள்:**

- இயற்கையை வழிபடும் இவர்கள் ஜீவதேவனை அறிந்துக் கொள்ள ஜெபிப்போம்.
- புலம்பெயர்தல் மறைந்து, வாழும் பகுதியிலேயே போதிய வருமானம் கிடைக்க ஜெபிப்போம்.
- பரகையா மக்களின் குழந்தைகள் கல்வி அறிவு பெற ஜெபிப்போம்.
- “தாக்கியா யோஜனா” (ரேஷன் நேரடியாக வீட்டுக்கு வருதல்), PVTG பென்ஷன் ரூ. 1000/- திட்டம், PM ஜன்மான் திட்டம் இவை எல்லா மக்களையும் சேர மற்றும் மக்கள் மத்தியில் அதீத சார்பை ஏற்படுத்தாதிருக்க ஜெபிப்போம்.
- பரகையா மக்கள் மத்தியில் ஊழியர்கள் அனுப்பப்பட ஜெபிப்போம்.
- இவர்கள் மத்தியிலிருந்து அநேக மிஷனெரிகள் எழும்ப ஜெபிப்போம்.

Mr. Suriya Kumar





Ms. Lily Reaiah Grace

வலைக்குள் சிக்காதே

# போலி கடன் செயலி மோசடி

பல இந்தியர்களுக்கு வீடு புதுப்பித்தல், மருத்துவச் செலவுகள் அல்லது எதிர்பாராத நிதி நெருக்கடி என எவ்வித நிதிநெருக்கடியாக இருந்தாலும் குறைந்தபட்ச ஆவணங்களுடன் விரைவாக கிடைக்கும் தனிநபர் கடன்களே உடனடி மற்றும் சிறந்த தீர்வாக மாறியுள்ளன. ஆனால் டிஜிட்டல் யுகத்தில் டிஜிட்டல் கடன் வளரும் அதே வேகத்தில், அபாயங்களும் அதிகரிக்கின்றன. மோசடி செய்பவர்கள் தனிநபர் கடன் மோசடிகள் மூலம் கடன் வாங்குபவர்களைச் சுரண்டுவதற்கு போலி கடன் செயலிகள், ஃபிஷிங் அழைப்புகள் மற்றும் நம்புவதற்கு கடினமான சலுகைகள் என புதிய புதிய வழிகளைக் கண்டுபிடித்து வருகின்றனர்.

உடனடி கடன்களை உறுதியளிக்கும் ஒரு செயலி அல்லது வலைத்தளம் ஒன்றை ஒருவர் காண்கிறார். இதற்கு ஆவணங்கள் தேவையில்லை, சோதனைகள் இல்லை, விரைவான ஒப்புதல், அட அருமை என விண்ணப்பிக்க, அவர் விண்ணப்பித்தவுடன், விஷயங்கள் தலைகீழாக மாறுகின்றன. அவரின் தனிப்பட்ட தகவல்கள் திருடப்படுகின்றன, முன்கூட்டியே பணம் செலுத்தக் கட்டாயப்படுத்தப்படுகிறார். அல்லது பின்னர் அதிகப்படியான கட்டணங்களுடன் பணத்தைத் திருப்பி செலுத்த கட்டாயப்படுத்தப்படுகிறார். இதுதான் இந்த கடன் மோசடிகளில் சிக்கும் பலரின் அவலநிலை.

### முன்பணக் கட்டண மோசடி:

இந்த மோசடியில் ஒருவருக்கு தனிநபர் கடனுக்கு முன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறி குறுஞ்செய்தி அல்லது அழைப்பு வரும். வருமானச் சான்று தேவையில்லை, கடன் சரிபார்ப்புகள் தேவையில்லை. ஆனால் கடன் செயல்படுத்தப்படுவதற்கு முன்பு, ACCOUNT DETAILS சரிபார்ப்பு அல்லது செயலாக்கத்திற்கு நீங்கள் ஒரு சிறிய கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்பார்கள். ஒருவர் பணத்தை TRANSFER செய்தவுடன், கடன் வழங்குபவர் பணத்துடன் காணாமல் போய்விடுவார்.

### ஃபிஷிங் மற்றும் ஆள்மாறாட்டம் மோசடி:

உங்கள் வங்கியிலிருந்து வந்ததாகக் கூறி உங்களுக்கு அழைப்பு, மின்னஞ்சல் அல்லது SMS வரும். முகவர் உங்களுக்கு ஒரு பிரத்யேக முன் ஒப்புதல் பெற்ற கடனை வழங்குகிறார். ஆனால் PROCESSING தொடர, உங்கள் OTP, ஆதார் எண் அல்லது உள்நுழைவு விவரங்களைப் பகிர வேண்டும் என கேட்பார். அவற்றை கொடுத்த சில நிமிடங்களில், மோசடி செய்பவர்கள் அந்த நபரின் வங்கிக் கணக்கை அணுகி எல்லா பணத்தையும் சுரண்டிவிடுவார்கள்.

பெங்களூரைச் சேர்ந்த ஒருவர் இந்த FAKE LOAN SCAMயில் ₹5.8 லட்சத்தை இழந்துள்ளார். வங்கி பிரதிநிதிகள் போல் காட்டிக் கொண்டு, சைபர் குற்றவாளிகள், SMS மூலம் பெறப்பட்ட போலி கடன் ஒப்புதல் இணைப்பைக் கிளிக் செய்யவைத்து, போலியான வலைத்தளத்தில் அவரது சான்றுகளை உள்ளிட செய்து அவரை ஏமாற்றி பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர்.

சரி, தனிநபர் கடன் சலுகையின் சட்டப்பூர்வத்தன்மையை எவ்வாறு சரிபார்ப்பது? கடன் வழங்குபவர் RBIஇல் பதிவுசெய்யப்பட்டவரா அல்லது அங்கீகரிக்கப்பட்ட NBFCயா என்பதை எப்போதும் சரிபார்க்கவும். கடன் வழங்குபவரின் வலைத்தளத்தை நேரடியாகப் பார்வையிட்டு, தகவல்களை சரிபார்க்கவும். குறுஞ்செய்திகளில் வரும் இணைப்புகளை ஒருபோதும் கிளிக் செய்ய வேண்டாம். நம்பகமான வங்கிகளிலிருந்து மட்டுமே கடன் செயலிகளை (APPS) பதிவிறக்கவும். பகிரப்பட்ட இணைப்புகள் வழியாக ஒருபோதும் பதிவிறக்க வேண்டாம். கடன் வழங்குபவரின் அதிகாரப்பூர்வ வாடிக்கையாளர் சேவையை அழைத்து சலுகைகளின் தகவல்களை (CROSS CHECK) சரிபார்க்கவும். RBI SACHET அல்லது சமூக ஊடகங்களில் வாடிக்கையாளர் மதிப்புரைகளை (CUSTOMER REVIEWS) ஆராய்ந்து குறைபாடுகளைக் கண்டறியவும்.

### தெரியாமல் கடன் மோசடியில் சிக்கினால் என்ன செய்வது?

1. CYBERCRIME.GOV.INஇல் புகார் அளிக்கவும். சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளை முடக்க உடனடியாக உங்கள் வங்கிக்குத் தெரிவிக்கவும். வங்கி, மின்னஞ்சல் மற்றும் இணைக்கப்பட்ட பயன்பாடுகளின் PASSWORDகளை மாற்றவும்.
2. உங்கள் PROFILE மேல் மோசடி எச்சரிக்கையை பதிவுசெய்ய கடன் பணியகங்களை (CREDIT BUREAUS) எச்சரிக்கவும்.
3. காவல்துறையில் புகார் அளிக்க - செய்திகள், ஸ்கிரீன்ஷாட்டுகள் மற்றும் கட்டணப் பதிவுகள் போன்ற அனைத்து ஆதாரங்களையும் சேகரிக்கவும்.
4. உங்கள் கதையை குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்து விழிப்புடன் இருக்க எச்சரிக்கலாம்.

### ஜெபக் குறிப்புகள்:

- ✦ வேலையின்மை, குறைந்த வருமானம், வறுமை போன்ற நம் மக்களின் நிதி நெருக்கடி நிலைகள் மாறி வாழ்வாதாரம் உயர்த்தப்படவும், அநேகருக்கு கடன் கொடுப்பவர்களாய் மாறவும் ஜெபிப்போம்.
- ✦ FAKE LOAN OFFERS மூலம் மக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் அனைத்து மோசடிக்காரர்களும் பண ஆசை என்னும் ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்று மனம்திரும்பவும், சட்டத்தின்படி சீர்திருத்தமடையவும் ஜெபிப்போம்.
- ✦ நெருக்கடிகள் மத்தியில் பணத்தை இழந்து வெட்கத்துக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளோர் இயேசுவின் நாமத்தில் ஆறுதல் அடையவும் இழந்ததைத் திருப்பிக் கொள்ளவும் ஜெபிப்போம்.
- ✦ இணைய வங்கிசேவைகளின் விதிமுறைகளும், பாதுகாப்புகளும் நம் தேசத்தில் பலப்படுத்தப்படவும் சரியாக நெறிப்படுத்தப்படவும் ஜெபிப்போம்.
- ✦ சைபர் குற்றங்களைத் தீர்ப்பதில் ஈடுபட்டுள்ள காவல்துறை, RBI, சைபர் பாதுகாப்பு அதிகாரிகள் போன்றோர் விரைவாகவும், விவேகமாகவும், நியாயமாகவும் செயல்பட ஜெபிப்போம்.



# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் - தேன்கனிக்கோட்டை

(நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)

## அந்தேவனபள்ளி திருச்சபை வரலாறு



முதல் விசுவாசி



PRAYER POINTS -BACK TO REVIVAL

Rev. Ruban Ramalingam

பெரியமலையில் ஆரம்பிக்கப்பட்ட நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியமானது அத்தோடு நில்லாமல் அது தன் எல்லைகளை விரிவாக்கம் செய்யும் தேவப் பணியில் தீவிரம் காட்டியதன் விளைவாக மலர்ந்த திருச்சபைகளில் அந்தேவனபள்ளி திருச்சபையும் ஒன்றாகும். இது கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அஞ்செட்டி செல்லும் பிரதான சாலையில் அமைந்துள்ள பின்தங்கிய மலைக் கிராமமாகும். திரு. பிலிப் ஆசீர்வாதம் அண்ணன் அவர்களின் குடும்பம், திரு. தர்மமணி அண்ணன் அவர்களின் குடும்பம் மற்றும் திரு. ஜீவமணி அண்ணன் ஆகியோர் இப்பகுதியின் முன்னோடி மிஷனெரிகளாவார்கள். இயேசு திரைப்படம் மற்றும் இளைய குமாரன் நாடகம் மூலமாக இப்பகுதியில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இது கிராமத்தினர் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

பலவிதமான சூழ்நிலைகளுக்கு மத்தியில் பிசாசின் தொல்லையால் ஏழு ஆண்டுகளாக தீராத வயிற்று வலியால் அவதிப்பட்டு தற்கொலைக்கு முயன்ற திரு. பீட்டர் சண்முகம் இம்மாவட்டத்திலுள்ள மந்திரவாதிகள் மற்றும் குறி சொல்லுகிறவர்களைத் தேடி சென்றும், உயர்தர மருத்துவமனைகளை நாடியும் சுகம் கிடைக்காமல் நமது ஊழியரின் மூலமாக அவருக்கு தேவன் கொடுத்த அற்புத சுகம் இத்திருச்சபை வரலாற்றில் புதிய மைல் கல்லாக அமைந்தது. இவரின் மூலமாக பிசாசின் கட்டுகளிலிருந்தோர், வியாதியிலிருந்தோர் மற்றும் கடன் பிரச்சனையிலிருந்தோர் என அநேகர் இயேசு கிறிஸ்துவின் அன்பை ருசி பார்த்தனர்.

அவர்களில் திருமதி. மேரி காந்தம்மா அவர்களுக்கு இளம் பிராயத்திலேயே தனது உறவின் முறையினர் ஒருவருடன் திருமணம் நடைபெற்றது. ஆஸ்துமா வியாதியால் அவதிப்பட்டு வந்த அவரது கணவர் திருமணமான சில நாட்களிலேயே வியாதி மிகவும் தீவிரமாகி அதிக பலவீனமடைந்தார். மருத்துவமனைகளுக்கு சென்று மருந்து மாத்திரைகளை எடுத்தும், எல்லா கடவுள்களையும் பக்தியுடன் தேடியும், குலதெய்வத்திற்கு பசுவை காணிக்கையாக செலுத்தியும் பலனில்லாமல் பெற்றோர்களாலும், உறவினர்களாலும் கைவிடப்பட்ட நிலையில் நமது விசுவாசியான திரு. பீட்டர் சண்முகம் அவர்களின் சாட்சியின் மூலமாக இயேசு கிறிஸ்துவை அறிந்தார். பின் நமது ஊழியரை அவரது இல்லத்திற்கு வரவழைத்தார். ஊழியர் அவருக்கு ஒரு புதிய ஏற்பாடு புத்தகத்தையும், ஜெபித்த தண்ணீரையும் அவருக்கு கொடுத்தார். அன்றிலிருந்து அவர்களது ஜெபம் "இயேசுவே எங்களைக் காப்பாற்றும், இயேசுவே எங்களைக் காப்பாற்றும்" என்பதாகவே இருந்தது.

சில சமயங்களில் அவரும் அவரது தாயாரும் சுவற்றில் முட்டி மோதி அழுது ஜெபித்தனர். ஒருநாள் அவரது கணவரின் உறவினர்கள் அவரை சந்தித்துவிட்டு இவர் காலையில் உயிருடன் இருக்க மாட்டார் எனக் கூறி விட்டுச் சென்றனர். அவரது தாயார் நள்ளிரவில் சுமார் ஒரு மணி நேரத்தில் உனது கணவர் மரித்துவிட்டார் என்றார். அவரைப் பார்த்தபோது அவரது வாய் திறந்து பேச்சு மூச்சில்லாமல் இருந்தார். என்ன செய்வதென்றே அறியாமல் அவரும் அவரது தாயாரும் சுவற்றில் முட்டி மோதி அழுது இயேசுவே எங்களைக் காப்பாற்றும் என அழுது ஜெபித்தனர். அப்படியே அவர்களை அறியாமல் தூங்கி விட்டனர். ஒரு அரை மணி நேரம் கழித்து எனது கணவர் திடீரென்று கண்விழித்து எழுந்து எனது தாயாரை அழைத்து எனக்கு சாப்பிட களி செய்து கொடுங்கள் என்றவாரே வெளியே எழுந்து சென்றார். எனது தாயாரோ இவருக்கு பைத்தியம் பிடித்து விட்டதோ என பயந்தார். ஏனெனில் அதற்கு முன்பதாக அவரை தூக்க மூன்று பேர் வேண்டும். இரண்டு ஆண்டுகளாக சரியான சாப்பாடு இல்லை. தண்ணீர் கொடுத்தாலும் அதையும் வாந்தி எடுத்து விடுவார். ஏன்? என்ன நடந்தது? என விசாரித்தபோது கனவில் ஒருவர் வந்து தன்னை ஆசீர்வதித்ததாகவும் எழுந்து நடக்க சொன்னதாகவும் தெரிவித்தார். அதிகாலை 4 மணிக்கு சமைத்து வைத்திருந்த களி முழுவதையும் சாப்பிட்டார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே எனது கணவருக்கு முழுமையாக சுகம் கொடுத்தார். அல்லேலூயா!

இதுப்போல எண்ணிறைந்த அற்புதங்களைத் தேவன் இத்திருச்சபையில் செய்தார். ஆதலால் விசுவாசிகளின் எண்ணிக்கைப் பெருகியது. ஆரம்ப காலங்களில் விசுவாசிகளின் வீடு, வாடகை அறை, எதிர்ப்பின் சமயங்களில் தோட்டத்திலுள்ள மரத்தடி என பல இடங்களில் ஆராதித்து வந்தனர். 2011ஆம் ஆண்டு முதல் ஆலய கட்டிடத்தில் தேவனை ஆராதித்து வருகின்றனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**துதிக்க:**

★ பிரச்சினைகளின் மத்தியிலும் இத்திருச்சபை விசுவாசிகள், விசுவாசத்தில் உறுதியாய் நின்று கிறிஸ்துவுக்காய் சாட்சி பகிர்ந்தமைக்காக ஆண்டவரைத் துதியுங்கள்.

★ மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இப்பகுதி மக்கள் மத்தியில் தேவன் அற்புத அடையாளங்கள் மூலமாக தமது நாமத்தை மகிமைப்படுத்தி வருவதற்காக தேவனைத் துதியுங்கள்.

**ஜெபிக்க:**

★ இப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் மனம் மாறி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்திட ஜெபியுங்கள்.

★ சுற்றிலுமுள்ள மலைக் கிராமங்களில் இருந்து அநேக ஆத்தும அறுவடை கிடைக்க பாரத்தோடு ஜெபியுங்கள்.

Mr. Hutson & Mrs. Gifta

# ஜெபிக்கலாம் வா... VIRAL NEWS



## தேசத்தை அதிரவைத்த தீவிரவாத தாக்குதல்

### 26 Tourist Shot Dead

தேசத்தில் நடக்கும் தீவிரவாத தாக்குதல்கள் தடுக்கப்பட ஜெபிப்போம். தீவிரவாத தாக்குதலினிமித்தம் உயிரிழுந்தவர்களின் குடும்பத்தின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



## இந்தியா பாகிஸ்தான் போர்

தேசங்களிடையே சமாதானம் நிலவ, போர்வீரர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

## அதிக மழையினிமித்தம் பரிதவிப்பு!

### பெங்களூர், மும்பையில் மழைக்கான சிவப்பு எச்சரிக்கை

மழை, வெள்ளம் பாதிப்பிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.





## மீண்டும் பரவும் CORONA

தேசத்தில் கொள்ளை நோயின் தொற்று பரவாதிருக்க, பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் பூரண குணமடைய ஜெபிப்போம்.



## RUSSIA — UKRAINE WAR

### 12 DEAD IN DRONE ATTACK BY RUSSIA

ரஷ்யா – உக்ரைன் போர் நிறுத்தப்பட, உலக தலைவர்கள் சமாதானத்திற்கேதுவான தீர்மானங்களை ஏற்றெடுக்க ஜெபிப்போம்.



# வேதாகம ஊழியம்

3rd WEEK MESSAGE

JESUS MISSION

Mr. M. Jerome Stanley

"கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கிடைக்குமென்றார் - இயேசு தேடுங்கள் கிடைக்குமென்றார்". இந்த பாடல் ஒலிக்கப்படாத இடங்களே இல்லை என்ற அளவிற்கு மிகவும் பிரசித்தி பெற்ற பாடல். இப்பாடலை இயற்றியவர் திரு. TAPE ராதா மாணிக்கம் அவர்கள். நீங்களும் நிச்சயம் ஒருமுறையாவது இப்பாடலை கேட்டிருப்பீர்கள். எளிமையான ராகம், இயல்பான இசை என்பதால் இப்பாடல் வரிகள் நம் கவனத்தை ஈர்க்கிறது. இது இன்றைய கால நிலையிலுள்ள கிறிஸ்தவ பாடல்களிலிருந்து தலைகீழாக மாறியிருக்கிறது.

முதல் சரணத்தின் மூன்றாவது வரிகள் இப்படியாக வருகிறது. "ஆறு வயதினில் ஆரம்பப் பள்ளியில் கல்வி பயின்றாரே, ஆகமங்கள் ஐம்பத்தாறினையும் ஐயம் தீர உணர்ந்தார்". ஆகமங்கள் 56 நீங்கள் சரியாக தான் வாசித்தீர்கள். எழுத்துப்பிழையோ, அச்சு பிழையோ அல்ல. ஆகமங்கள் 56 என்று தான் இப்பாடலின் ஆசிரியர் எழுதியிருக்கிறார். ஆகமங்கள் ஐந்து தானே, ஒருவேளை பரிசுத்த வேதாகமத்தின் முழு புத்தகங்களின் இலக்கத்தை 66 என்று எழுதுவதற்கு பதில் 56 என்று எழுதிவிட்டாரோ. இப்படி நம்முடைய எண்ணங்கள் சிறகடிக்கும். மேலும் ஒருபடி போய், இப்பாடல் கத்தோலிக்கர்களின் பாடல் அவர்கள் பயன்படுத்தும் வேதாகமத்தில் 56 புத்தகங்கள் இருக்கும் போல என்று பேசுபவர்களும் உண்டு.

56 முழு வேதாகமத்தின் புத்தகங்களில் இலக்கமானால், இயேசு பூமியில் வாழும் போது பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்கள் தான் எழுதப்பட்டிருந்தது. அவர் பரமேறிய பிறகுதான் புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் எழுதப்பட்டது. இப்பொழுது முழு பழியும் TAPE ராதா மாணிக்கம் அவர்கள் மீது திருப்பிவிட்டிருப்போம். உண்மையில் ராதா மாணிக்கம் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு இப்பாடலை எழுதாமல், நன்கு திட்டமிட்டு கவனமுடன் ஆராய்ந்து தான் இந்த வரிகளை எழுதியிருக்கிறார். 56 என்பது வேதாகம தியான அட்டவணை அதாவது பழைய ஏற்பாட்டின் புத்தகங்களில் தியான பகுதிகள் மொத்தம் 56. இந்த அட்டவணை உலகளாவியது. உலகமெங்கிலும் உள்ள யூதர்கள் இந்த முறைப்படி தான் பழைய ஏற்பாட்டை குடும்பமாகவும், தனியாகவும் தியானம் செய்வார்கள். இது ஓராண்டிற்கான தியானத் திட்டம். 52 வாரங்கள் அதனோடு 4 பகுதிகள் சிறப்பு நாட்களுக்கான தியான திட்டம். இதைதான் ராதா மாணிக்கம் 56 ஆகமங்கள் என்று பதிவு செய்திருக்கிறார்.

பரி. லூக்காவின் நற்செய்தி புத்தகம் 4ஆம் அத்தியாயத்தில் இயேசு தன்னுடைய சொந்த ஊரான நாசரேத்துக்கு சென்றபோது அவர் ஆலயத்திற்கு சென்றதாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்போது அவர் ஏசாயா தீர்க்கனின் புத்தகம் 61ஆம் அத்தியாயத்தை வாசிக்கிறார். இதில் நாம் கவனிக்க வேண்டிய முதல் காரியம் லூக்கா 4:16இல் "தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து", அவர் ஓய்வு நாளில் ஜெப ஆலயம் செல்வதையும், வேத தியானம் செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். முழு வேதமும் சுட்டிக்காட்டும் மெய்யான வழி இயேசு கிறிஸ்து தான். இருப்பினும் அவர் நமக்கு முன்மாதிரியாக இவற்றை வைத்து சென்றிருக்கிறார். அவர் ஜெப ஆலயத்தில் வாசித்த பகுதி அன்று நடப்பிலிருந்த வேத தியான முறை. இது பாபிலோனிய சிறையிருப்பில் இருந்தவர்கள் கொண்டுவந்த தியான அட்டவணை. மோசேயின் முதல் ஐந்து ஆகமங்களையும் அனைத்து தீர்க்கதரிசன புத்தகங்களையும் இணைத்து மூன்றரை ஆண்டுகள் தொடர்ச்சியாக வேதப்பகுதியை வாசிப்பார்கள். இதன் தியானப் பகுதியை அடுத்த பகுதியில் நாம் தெரிந்து கொள்ளலாம். இந்த அட்டவணையை தான் அன்று இயேசு கிறிஸ்து பயன்படுத்தியிருப்பார் என்று மிகத் துல்லியமான தடயங்கள் இருக்கிறது.

வேதத்தை வாசிக்க நாம் அநேக முறைகளைக் கையாண்டாலும் சுமார் மூன்றாயிரம் ஆண்டுகளாக யூதர்கள் ஒரு முறையை பயன்படுத்துகின்றனர். அதன் பெயர் PaRDeS முறையாகும். இதை விளக்க தற்போது இயலாது. ஆனால் சுருக்கம் என்னவெனில் இது நான்கு படிகளைக் கொண்டது. Peshat, Remez, Derash and Sod அதாவது வேதத்தின் பகுதியைத் தியானித்து அதிலுள்ள ஞான அர்த்தம் மற்றும் கிறிஸ்துவின் நிறைவேறுதல் வரை படிப்பது, அதாவது வேதத்தை தியானிக்கும்போது நாம் கிறிஸ்துவோடு உலாவலாம், உறவாடலாம் என்பது தான் இதன் இரத்தின சுருக்கம். ஆதாம், ஏவாள் கடவுளோடு உலாவின இடம் ஏதேன். அதேபோல் நீங்களும் வேதத்தை வாசிக்கும்போது அல்லது தியானிக்கும் போது கிறிஸ்துவோடு உலாவலாம் என்பதுதான் பரதீசின் முறை. நாம் சுவிசேஷ புத்தகங்களைக் கவனமாக வாசித்தால், இயேசு வேத வசனங்களை எப்படி பயன்படுத்தினார் என்பதை தெளிவாகப் பார்க்கலாம். இயேசுவின் ஊழியம் ஆரம்பத்தில் அதாவது மலையில் சோதனைக்காரனை ஜெயித்தது வேத வசனம் மூலம்தான். இறுதியாக கொல்கதா மேல் உபயோகித்ததும் வசனம் தான். இயேசுவானவரே வசனத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்றால் நீங்களும், நானும் எம்மாத்திரம்.

இந்த வேதாகம ஊழியம் என்பது வேதத்தைக் கையில் ஏந்தி செல்வது மட்டுமல்ல, வசனத்தை உரக்க சொல்லும் ஊழியம். நம் தமிழ் கலாச்சாரத்தில் முந்திய திருச்சபையார் குறிப்பாக கிராம திருச்சபையார் அதிகாலையில் வீதிகளில் நின்று உரக்க வசனம் சொல்லுவார்கள். இன்று காலத்தால் அழிந்துவிட்டது. நீ கூட இப்படிபட்ட ஊழியத்தைத் திட்டமிடலாம். தனிநபராகவோ அல்லது சிறு குழுவாகவோ அதிகாலை 4 மணி முதல் 5 மணி வரை வீதிகளின் முனைகளில் நின்று உரக்க வசனங்களை மட்டும் சொல்ல வேண்டும். உனக்கு யோசிக்க திகைப்பாக இருந்தாலும் **இந்த ஊழியத்தைச் செய்ய ஆரம்பித்தால் உன்னால் நிறுத்த முடியாது. விளைச்சல் அமோகமாக இருக்கும். புதிய திருப்பத்திற்கு அடித்தளம் இடலாம் வா!**



# பைபிள் வணிகக் கோட்பாடுகள்

Mr. Isaac Kamalesh

நாம் பல வருடங்களாக பைபிளைப் படித்து வருகிறோம். ஊக்கம், ஆறுதல், முன்னேற்றம் மற்றும் உத்வேகம் போன்ற வார்த்தைகளை அடிக்கடி படித்து வருகிறோம். வெற்றிகரமான வணிகத்தை உருவாக்குவதற்கான சிறந்த கொள்கைகளும் அதில் இருப்பதையும் நாம் காணலாம்.

பின்வரும் கொள்கைகள் நம்முடைய வணிகத்தையும் தேவராஜ்ய தாக்கத்தையும் வளர்க்க உதவும்.

**கொள்கை 1 – எப்போதும் இரண்டாவது படியை எடுங்கள் [ALWAYS TAKE THE SECOND STEP]:**

எப்போதும் எதிர்பார்த்ததை விட அதிகமாகச் செய்யுங்கள். மற்றவர்கள் செய்யாத சிறிய விஷயங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் மற்றவர்களை ஆச்சரியப்படுத்துங்கள். வித்தியாசமாக இருங்கள். இயேசுவே இந்தக் கொள்கையை மத்தேயு 5:41இல் கூறுகிறார். மற்றவர்கள் தன்னை இன்னும் தெளிவாகக் காண உதவுவதற்காக, கலாச்சாரத்திலிருந்து தங்களைப் பிரித்துக் கொள்ளுமாறு இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களிடம் கூறுகிறார்.

**கொள்கை 2 – 'தங்க விதி' முக்கியம் [THE GOLDEN RULE WORKS IF YOU WORK IT]:**

முதலில் மற்றவர்களைப் பற்றி சிந்தியுங்கள். நீங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்படியே மற்றவர்களையும் நடத்துங்கள். சிந்தனையுடன் பழகுங்கள். ஒரு தொழிலைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு பயனுள்ள கொள்கை லூக்கா 6:31இல் காணப்படுகிறது. தங்கள் வாடிக்கையாளர்களைப் பற்றி சிந்திக்காத நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்களால் சிந்திக்கப்படாது.

**கொள்கை 3 – நோக்கம் முக்கியம் – லாபத்தில் கவனம் [FOCUS ON PROFIT WITH A PURPOSE]:**

ஒவ்வொரு வெற்றிகரமான வணிகமும் லாபத்தை உருவாக்குகிறது. தவறான லாபம் தீங்கு விளைவிக்கும் என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா என்று மாற்கு 8:36இல் இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களிடம் கேட்டார்.

**கொள்கை 4 – விதைத்தல் மற்றும் அறுவடை செய்தல் என்ற சட்டத்தை நம்புங்கள் [TRUST THE LAW OF SOWING AND REAPING]:**

வெற்றிகரமான வணிகங்கள் விதைத்தல் மற்றும் அறுவடை செய்தல் என்ற சட்டத்தை அறிந்திருக்கின்றன (2 கொரிந்தியர் 9:6). ஒரு சிறிய விதையுடன் தொடங்க பயப்பட வேண்டாம். இன்று நீங்கள் அறுவடை செய்யும் அறுவடை நேற்று நீங்கள் விதைத்த விதைகளிலிருந்து வந்தது. பைபிளின் மற்றொரு பகுதி, நாம் விதைப்பதையே அறுவடை செய்வோம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. எனவே, மிகுதியாக விதைத்து, உங்கள் விளைச்சலை அறுவடை செய்ய தொடர்ந்து விழிப்புடன் இருங்கள்.

**கொள்கை 5 – சாத்தியமற்றதை நம்புங்கள், கேளுங்கள் [BELIEVE AND ASK FOR THE IMPOSSIBLE]:**

எல்லா சிறந்த விஷயங்களும் ஒரு கனவில் இருந்து தொடங்குகிறது. பெரிய தொலைநோக்குகளைக் கொண்ட தலைவர்கள் மற்றும் அமைப்புகளுடன் இருக்க மக்கள் விரும்புகிறார்கள். கடவுள் உங்களை வியக்க வைக்கும் விஷயங்களைச் செய்ய விரும்புகிறார். பெரியதாக கனவு காணுங்கள், நீங்கள் கேட்பதை விட அல்லது கனவு காண்பதை விட அதிகமாகச் செய்யும்படி கடவுளிடம் கேளுங்கள் (எபேசியர் 3:20,21).

**கொள்கை 6 – தலைமுறைகளுக்கு கட்டியெழுப்புங்கள் [BUILD TO THE FOURTH GENERATION]:**

காலத்தின் சோதனையில் நீடிக்காத விஷயங்களைக் கட்டியெழுப்புவதில் நேரத்தை வீணாக்காதீர்கள். சரியான அடித்தளத்தில் கட்டியெழுப்புவது உங்கள் வணிகம் சந்தை மாற்றங்களின் புயல்களைத் தாங்க உதவும். ஒரு சிறந்த வணிகத்தை உருவாக்குவதற்கான திறவுகோல் அனைத்து சூழ்நிலைகளிலும் நேர்மையுடன் செயல்படுவதாகும். மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் கூறுகிறார் "சரியானதைச் செய்ய எல்லா நேரமும் சரியானது (The time is always right to do what is right)" (நீதி. 4:25, 27). உறுதியான அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்ட வணிகங்கள் பல தலைமுறைகளுக்கு கட்டமைக்கப்படுகின்றன. நமது விதி எதிர்காலத்தில் வெளிப்படுகிறது, ஆனால் அது இன்று நாம் எடுக்கும் முடிவுகளால் வடிவமைக்கப்படுகிறது.

**கொள்கை 7 – காரியங்களின் வரிசையை உணர்ந்து வரிசைப்படுத்துங்கள் [KNOW THE ORDER OF THINGS AND WORK THE ORDER]:**

மத்தேயு 6:33இல், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்குப் பின்பற்ற ஒரு சக்திவாய்ந்த கொள்கையைக் கொடுக்கிறார். நீங்கள் செயல்களின் வரிசையைப் புரிந்து கொள்ளும்போது எல்லா செயல்களும் எளிதாகிவிடும். கடவுளையும் அவருடைய கொள்கைகளையும் உங்கள் முன்னுரிமையாக ஆக்குங்கள்.

**கொள்கை 8 – உங்கள் நிறுவனத்தை மேம்படுத்த உங்கள் குழுவை மேம்படுத்துங்கள் [IMPROVE YOUR TEAM TO IMPROVE YOUR ORGANIZATION]:**

நீங்கள் தனியாக உருவாக்கக்கூடியதை விட பெரிய ஒன்றை உருவாக்க உங்களை ஊக்குவிக்க உங்களைச் சுற்றி ஒரு குழு தேவை. உங்கள் ஆர்வத்தைக் கண்டுபிடித்து, உங்கள் குழுவில் ஆர்வமுள்ளவர்களைச் சேர்க்கவும். ஒரு ஆர்வமுள்ள நபர் நான்கு நபர்களுக்கு மதிப்புடையவர். எபே. 2:10 என்ற வசனம் கிறிஸ்தவ வணிகத் தலைவருக்கு அவர்கள் ஒரு நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை நினைவூட்டுகிறது. உண்மையில், அவர்கள் ஒரு நோக்கத்துடன் உருவாக்கப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், அவர்களின் குழுவில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் அதே நோக்கம் இருக்க வேண்டும்.

**கொள்கை 9 – நாளையைப் பாதிக்கும் விஷயங்களை இன்றே செய்யுங்கள் [DO THINGS TODAY THAT WILL IMPACT TOMORROW]:**

பல வணிகங்களையும், தலைவர்களையும் வடிவமைத்த ஒரு கொள்கை (மத்தேயு 6:21). "முதலீடு" என்பது புதையலுக்கான மற்றொரு சொல். தலைவர்கள் முதலீடுகளைச் செய்ய அழைக்கப்படுகிறார்கள். வணிகங்கள் புத்திசாலித்தனமாக முதலீடு செய்யப்படும்போது அவை வளரும்.

**கொள்கை 10 – சிறப்பானதை நோக்கிச் செயல்படுங்கள் [WORK TOWARD 'WELL DONE']:**

வேதாகமக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு தொழிலைக் கட்டியெழுப்புவதற்குக் கண்ணோட்டத்தில் மாற்றம் தேவை. கிறிஸ்தவத் தலைவர்களுக்கு ஒரு அத்தியாவசியமான அணுகுமுறை, எல்லா நேரங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் சிறந்து விளங்குவதாகும். கொலோசெயர் 3:23, 24இல் பவுல் இந்த விமர்சன வார்த்தைகளை எழுதினார். கிறிஸ்தவர்கள் சராசரியான வேலையைச் செய்ய அழைக்கப்படவில்லை, ஆனால் கடவுளைக் கௌரவிக்கும் விதத்தில் சிறந்து விளங்க வேண்டும்.

**சிறந்த வேலை என்பது நித்தியத்திற்கான வேலை [EXCELLENT WORK IS ETERNAL WORK].**

# தமிழ் மாநில முகாம் - 2025

**கலந்துக்கொண்ட வாலிப பிள்ளைகளின் கருத்துக்கள்**

இந்த மாநில முகாம் ஆண்டவரை இன்னும் அதிகமாக தேடுவதற்கு உதவியாக இருந்தது.

மிஷனெரி பகிர்வின் மூலம் மற்ற மாநிலங்களில் நடக்கும் ஊழியங்களைப் பற்றி தெரிந்து கொண்டேன்.

இந்த கூடுகையின் மூலம் மிஷனெரிகளுக்காய் ஊக்கத்துடன் ஜெபிக்கவும், ஆத்துமாக்களை குறித்ததான பாரமும் ஏற்பட்டது.

உண்மையான அர்ப்பணிப்பு என்றால் என்ன என்பதைப் புரிந்துக் கொண்டேன்.

இந்த முகாமின் Counselling நேரத்தில் எனது அநேக கேள்விகளுக்கு பதில் கிடைத்தது.

Choir was good. Songs was so meaningful & heart touching.

உபவாச நாள் அன்று அநேக ஜெபங்கள் ஏறெடுக்கவும், அன்றைய நாள் முழுவதும் தேவனுக்கு அருகில் இருப்பது போலவும் இருந்தது. என் ஜெபத்தின் வாழ்வை புதுப்பித்து கொள்ள ஜெப நாள் உதவியாயிருந்தது.

நிகழ்ச்சிகள் யாவும் அனைவருக்கும் பயனுள்ளதாயும், சிறப்பானதாயும், ஆண்டவரிடம் கிட்டிச்சேர ஏதுவாகவும் அமைந்தது.

முகாமில் கொடுத்த செய்திகள், நாடகங்கள், மிஷனெரிகளின் சாட்சிகள் மற்றும் அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களைக் குறித்ததான பாரம் எனக்குள்ளும் பாரத்தைக் கொண்டு வந்தது.

இக்கூடுகையில் பகிர்ந்து கொண்ட மிஷனெரி வாழ்க்கையைப் பற்றிய அனுபவங்கள், தரிசனங்கள் மிகவும் பிரயோஜனமாயிருந்தது.

It was a blessed prayer camp.

செய்திகளும், ஜெபங்களும், பாடல்களும் மிகவும் அருமையாக இருந்தது.

ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் அருமையாக நடத்தினர்.

முகாமின் செய்தி வேளைகளில் தேவன் என்னோடு பேசினார். மிவும் ஆசீர்வாதமாக இருந்தது.

Food and other facilities was very good.

Volunteers where doing good job by helping and guiding us.

தரிசன பாடல்களைப் பாடவும், தேவனுக்காய் செயல்படும் மிஷனெரிகளை காணவும் தேவன் கிருபை செய்தார்.

தேவ பிரசன்னத்தையும், மகிமையையும் கண்ட இடம் இந்த பெத்தேல் என உணர்ந்தேன்.

இந்த கூடுகையின் மூலமாக மிஷனெரிகளின் அர்ப்பணிப்பு மற்றும் தேவைகளை அறிந்துக் கொண்டேன்.

This meeting was well organized and was very useful.

உண்மையான அர்ப்பணிப்பு என்னவென்று இம்முகாமில் புரிந்து கொண்டேன். என் வாலிப நாட்களில் கர்த்தருக்காய் எதையாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

இக்கூடுகையில் ஆண்டவரின் பிரசன்னத்தை உணர்ந்தேன். சந்தியா வேளைகள் மிகவும் பயனுள்ளதாயிருந்தது.

I am attending this FMPB youth meet more than 15 years. Every time there is Good Vibe and more spiritual connections with God by message and songs our spiritually helped me lot. Thank you so much for arranged this meet every year.

# மாம்சீக தோற்றம் Vs ஆவிக்குரிய தோற்றம்

இந்த மாதம் தெரிஞ்சுக்கோ! புரிஞ்சுக்கோ பகுதியில் நாம் தெரிஞ்சுக்க வேண்டியது மாம்சீக தோற்றம் மற்றும் ஆவிக்குரிய தோற்றம். இது ஆங்கிலத்தில் BODY EXTERNALISM மற்றும் BIBLICAL EXTERNALISM என்று கூறலாம். இன்னும் புரியும்படி கூற வேண்டுமானால் உலகக் கவர்ச்சி மற்றும் ஆவிக்குரிய அலங்காரம் என்றும் கூறலாம் (THE BEAUTY OF WORLDLINESS / THE BEAUTY OF HOLINESS). இது மாம்சீகக் கவர்ச்சியின் மூல ஆதாரம் உலகம் என்றால், ஆவிக்குரிய அலங்காரத்திற்கு மூல ஆதாரம் வசனம். இதை மேலும் புரிந்துகொள்ள ரோமர் 12:2 மற்றும் 1 யோவான் 4:5யை உலக கவர்ச்சிக்கும், ரோமர் 8:29 மற்றும் பிலி. 3:10யை ஆவிக்குரிய அலங்காரத்திற்கும் ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாம். மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள வேறுபாடுகளை வாசித்த பிறகு மேலும் புரிந்துகொள்ள பகுத்தறிவு (DISCERNING SPRIT) மற்றும் தாலந்தோடும், ஜெபத்தோடும் நீங்கள் பார்க்கும் YOUTUBE கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் பாருங்கள். எடை போடாதீர்கள். குறை கூறாதீர்கள். ஜெபியுங்கள்.





| | மாம்சீக தோற்றம் | ஆவிக்குரிய தோற்றம் |
|---|---|---|
| 1. | உணர்வுகளைப் புலப்படுத்தும் | ஆன்மீகத்தைப் புலப்படுத்தும் |
| 2. | உணர்வுகளை வெளிப்படையாகக் காட்டும் | இயல்பை வெளிப்படையாகக் காட்டும் |
| 3. | தன்னை உயர்த்திக் காட்டும் | கிறிஸ்துவை உயர்த்திக் காட்டும் |
| 4. | தோற்றத்தின் இயல்பு | ஆவிக்குரிய இயல்பு |
| 5. | ஆபாசத்தை உணர்த்தும் | நற்பண்பை உணர்த்தும் |
| 6. | மாம்ச தன்மை உள்ளடக்கியது | ஆவிக்குரிய தன்மையை உள்ளடக்கியது |
| 7. | சிற்றின்ப மதிப்புகள் | வேதாகம மதிப்புகள் |
| 8. | விசுவாச துரோகிகள் அங்கீகரிக்கின்றனர். | விசுவாசிகள் அங்கீகரிக்கின்றனர் |
| 9. | சமூக ரீதியாக கறை நிறைந்தது | சமூக ரீதியாக மதிப்பு நிறைந்தது |
| 10. | உலக மதிப்புகள் | வசன (வார்த்தை) மதிப்புகள் |
| 11. | உலகின் வாழ்க்கை முறை | ஆவிக்குரிய வாழ்க்கை முறை |
| 12. | உலக அறிவு நிறைந்தது | வேத அறிவு நிறைந்தது |
| 13. | ஆளுமையை வெளிக்காட்டும் | பண்பை வெளிக்காட்டும் |
| 14. | உலகத்தன்மை என வரையறுக்கப்படுகிறது. | தெய்வீக தன்மை என வரையறுக்கப்படுகிறது |

Mrs. Kiruba



# அறிவுத்திறனுடையவருக்கு ஊழியம்

Mr. Israel Nathaniel Edward



'ஊழியம்' (கிரேக்க மொழியில் DIAKONIA) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்கு சேவை செய்வது என்று பொருள். ஏற்கனவே தெரிவித்திருந்தபடி, இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கிபி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். இந்த வாரம் நாம் அறிவுத்திறனுடையவருக்கான ஊழியத்தைப் பற்றிப் பார்க்க இருக்கிறோம்.

தேவன் மனிதர்களுக்குள் பாரபட்சம் செய்பவரல்ல. அவரைப் பொறுத்தவரை, புத்திசாலி அல்லது மந்தபுத்தியுள்ளவன், செல்வந்தன் அல்லது ஏழை என்பவை எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது. அனைவரும் சத்தியத்தை அறிகிற அறிவைப் பெற்று இரட்சிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆயினும்கூட, நம்முடைய கர்த்தராகிய இயேசு அறிவுத்திறனுடையவர்களிடையே தனது ஊழியத்தைத் தொடங்கினார் என்பது சுவாரஸ்யமானது. பன்னிரண்டு வயதில், அவர் எருசலேம் ஆலயத்தின் போதகர்களிடம் தனது ஞானத்தை வெளிப்படுத்தினார் (லூக்கா 2:46-47). சாமானிய மக்களுக்கு கற்பிப்பதில் அதிக நேரத்தை செலவிட்ட போதிலும், அவர் அறிவுத்திறனுடையவர்களைச் சந்தித்து உரையாடும் வாய்ப்புகளை எப்போதும் பயன்படுத்தினார். தனது ஊழியத்தின் முதல் ஆண்டில், இஸ்ரவேல் தேசத்தில் மரியாதைக்குரிய பழைய ஏற்பாட்டு போதகர்களில் ஒருவரான நிக்கோதேமுவுடன் உரையாடினார் (யோவான் 3:1-21). அதன் பின், அவர் பல முறை வேதபாரகர், பரிசேயர் மற்றும் யூத மேதைகள் மத்தியில் பல்வேறு விவாதங்களில் ஈடுபட்டார் (யோவான் 5:17-47, 7:14-24, 8:12-20, 10:22-38). இறுதி விசாரணையின் போது கூட, இயேசு சத்தியத்தைப் பற்றி பிலாத்துவிடம் பேச முயன்றார் (யோவான் 18:37). தனது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, கிலெயோப்பா என்னும் மற்றுமொரு சீடரின் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக, இயேசு தன்னைப் பற்றிய அனைத்து வேதவசனங்களையும் விளக்கினார் (லூக்கா 24:27). இத்தருணங்களில் பின்வரும் உண்மைகளை வெளிப்படுத்த அவர் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார்:

I. தான் தெய்வம் (யோவான் 3:13,5:24-26)
II. அவரும் பரமபிதாவும் இயல்பில் சமமானவர்கள் (யோவான் 5:17-19,10:30)
III. ஒரு நபர் இரட்சிப்படைய தன்னை விசுவாசிக்க வேண்டும் (யோவான் 3:16; 5:24; 6:40,47; 20:31)
IV. ஒரு விசுவாசி தனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவருடைய விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும் (மத்தேயு 7:21; யோவான் 8:51,14:15,15:10).

இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றினர். திருச்சபை நிறுவப்பட்ட முதல் பகுதியில், பேதுரு மற்றும் யோவான் இயேசுவே வாக்குப்பண்ணப்பட்டமேசியாஎன்றுயூதகல்விமான்களுக்கும், மதத் தலைவர்களும் நிரூபிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தனர் (அப்போஸ்தலர் 2:36, 4:8-12, 5:29-32). இது அநேக ஆசாரியர்கள் இரட்சிப்படைய காரணமாக இருந்தது (அப்போஸ்தலர் 6:7). பேதுரு, கொர்நேலியுவுடன் பேசுகையில், இயேசுவின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பைப் பற்றி பகிர்ந்து கொண்டார் (அப்போஸ்தலர் 10:34-48). பவுலும் அப்போஸ்தலர்களின் மாதிரியைப் பின்பற்றினார். அவர் சென்ற நகரங்களில், முதலில் யூதர்களிடையே தனது பணியைத் தொடங்கி, இயேசுவே வாக்குப்பண்ணப்பட்ட மேசியா என்பதை நிரூபிக்க முயன்றார் (அப்போஸ்தலர் 9:22; 13:5,14; 14:1; 16:13).

பவுல், அத்தேனே பட்டணத்து புறமதத்தாரிடம் பேசுகையில், மனந்திரும்புதலைப் பற்றிக் கூறுவதில் கவனம் செலுத்தினார் (அப்போஸ்தலர் 17:30). பின்னர், அப்போஸ்தலர்கள் விசுவாசிகளுக்கு கடிதங்கள் மூலம், கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை கோட்பாடுகளை விளக்கினர்.

**இவர்கள் பகிர்ந்துகொண்ட தலையாய உண்மைகளாவன:**

I. இயேசு இஸ்ரவேல் தேசத்தில் வாழ்ந்து, கடவுளின் ராஜ்யத்தைப் பற்றி பிரசங்கித்து, நோய்வாய்ப்பட்டவர்களையும், பிசாசு பிடித்தவர்களையும் குணப்படுத்தி, மக்களுக்கு நன்மை செய்தார்.

II. நம்முடைய பாவமன்னிப்புக்காக அவர் சிலுவையில் மரித்தார்.

III. நாமும் நித்திய ஜீவனை அனுபவிக்க முடியும் என்பதைக் காண்பிப்பதற்காக அவர் தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்.

IV. உயிரோடிருப்பவர்களையும், இறந்தவர்களையும் நியாயந்தீர்க்க ஒரு நாள் அவர் திரும்பி வருவார். ஏனென்றால் அவரே அனைவருக்கும் ஆண்டவர்.

V. அவரை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் பாவமன்னிப்பையும், நித்திய ஜீவனையும் பெறுவார்கள்.

VI. கேரளாவின் சீரிய கிறிஸ்தவர்களின் மரபுகளை நாம் நம்பினால், அப்போஸ்தலராகிய தோமா அறிவித்த நற்செய்தியை முதலில் ஏற்றுக்கொண்டது அறிஞர்களான நம்பூதிரிகளின் சமூகமே.

## நாம் என்ன செய்ய வேண்டும்?

"முதல் நூற்றாண்டின் அப்போஸ்தலர்கள் மற்றும் சுவிசேஷகர்கள் செய்ததைப் போல இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் பணியைக் குறித்து அறிவுத்திறனுள்ளவர்களுடன் நாம் உரையாடுகிறோமா? என்று கேட்டால், பதில் 'இல்லை' என்று இருக்கும். அதே நேரத்தில், பல்கலைக்கழகங்களிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் கூட எதிர்கருத்துள்ளவர்களே கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றி கேள்வி எழுப்புபவர்களாய் உள்ளனர். மேலும் நமது பிள்ளைகள் அர்த்தமுள்ள வகையில் அவர்களுக்கு பதிலளிக்கும் நிலையில் இல்லை. அப்படியானால், நாம் என்ன செய்ய வேண்டும்?

முதலாவதாக, மற்றவர்களின் நம்பிக்கை என்ன என்பதைக் கேட்டறிய நாம் நேரம் ஒதுக்க வேண்டும். அத்தேனே பட்டணத்தில் பவுல் நடந்துகொண்ட விதம் இதற்கு ஒரு நல்ல உதாரணம். அவர் அங்கு எப்பிக்கூரர் (EPICUREANS) மற்றும் ஸ்தோயிக்கர் (STOICS) என்ற தத்துவஞானிகளின் இரண்டு பிரிவுகளை சந்தித்தார் (அப்போஸ்தலர் 17:18). முதற்பிரிவின் நிறுவனரான எப்பிக்கூரஸ் (EPICURUS) கிறிஸ்துவுக்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார். உலகம் கடவுளால் படைக்கப்படவில்லை என்றும், கடவுள்கள் மனித விவகாரங்களில் தலையிடுவதில்லை என்றும் அவரைப் பின்பற்றுபவர்கள் நம்பினர். அவர்கள் ஆன்மாவின் அழியாத தன்மையையும் நம்பவில்லை. இக்கருத்துக்கள் தவறு என சுட்டிக்காட்டும்வண்ணம் பவுல், தேவன் எல்லாவற்றையும் படைத்தார் என்றும், அவர் நம் வாழ்க்கையை முழுவதுமாக ஆட்சி செய்கிறார் என்றும், இறந்தவர்களின் உயிர்த்தெழுதலைக் குறிப்பிட்டு ஆன்மா அழியாது என்றும் பேசினார் (அப்போஸ்தலர் 17:24, 26-27, 31).

மற்றொரு பிரிவான ஸ்தோயிக்கர்களின் நிறுவனர் ஜெநோ (ZENO) ஆவார். அவர் கிறிஸ்துவுக்கு 264 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். பிரபஞ்சம் கடவுளால் உருவாக்கப்பட்டது என்றும், அனைத்தும் விதியால் நிர்ணயிக்கப்பட்டவை என்றும் அவர் கற்பித்தார். மனிதன் தனது இயல்பின் அனைத்து உணர்வுகள் மற்றும் ஆசைகள் மீது முழுமையான ஆதிக்கத்தை அடைய வேண்டும் என்றும் போதித்தார். எதிர்காலத்தைப் பொறுத்தவரை, சில ஸ்தோயிக்கர்கள் பிரபஞ்சத்தின் அழிவு வரை மட்டுமே ஆன்மா இருக்கும் என்று நம்பினர். மற்றவர்கள் ஆன்மா இறுதியாக தெய்வீக சாராம்சத்தில் தன்னை உள்வாங்கி கடவுளின் ஒரு பகுதியாக மாறும் என்று நினைத்தனர். ஆனால் பவுல், மனிதன் தனது ஒவ்வொரு செயலுக்கும் பொறுப்பேற்க வேண்டும் என்றும், தேவன் இறுதியாக அவனை நியாயத்திற்கு கொண்டு வருவார் என்றும், மனந்திரும்புதலின் மூலம் மனிதன் கடவுளின் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியும் என்றும் கூறி, அவர்களது தவறான கருத்துக்களை தெளிவாக மறுத்தார் (அப்போஸ்தலர் 17:30-31).

எனவே, இரண்டாவதாக, நாம் வேதத்தின் கோட்பாடுகளை நன்கு அறிந்து, அவற்றில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம், பவுலைப் போல நாமும் முழுநிச்சயத்துடன் பதிலளிக்க முடியும். மூன்றாவதாக, நாம் அதை சாந்தத்துடனும், மரியாதையுடனும் செய்ய வேண்டும் (1 பேதுரு 3:15). இதன் விளைவாக, அத்தேனே பட்டணத்தார் போல் பலர் சத்தியத்தை உணர்ந்து, கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள் (அப்போஸ்தலர் 17:34).

**அன்புள்ள இளைஞர்களே, வேதவசனங்களை நன்கு அறிந்திருக்கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் அதைக் கற்றுக்கொள்ள தீவிரம் காட்டுகிறீர்களா?**

# ஊருணி வாசல்
## Fountain Gate


Rev. Prabakara Sarathy

### ஊருணி வாசலின் முக்கியத்துவம்:
எருசலேமிலுள்ள மக்களுக்கு நீர் வளங்கள் கிடைக்க இந்த ஊருணி வாசல் முக்கியமானதாக உள்ளது. இது குப்பைமேட்டு வாசலின் வடகிழக்கில், ராஜாவின் தோட்டத்திற்கு அருகிலுள்ள சீலோவாவின் குளத்திற்கு அருகில் அமைந்துள்ளது என்றும், அது கீதரோன் பள்ளத்தாக்கிற்கு வழிவகுத்தது என்று குறிப்புகள் கூறுகின்றன. சீலோவாமின் [Shiloah] நீர்நிலைகள் கீகோன் நீரூற்றில் தோன்றிய ஒரு நீரோட்டத்தைக் குறிக்கிறது. இது எருசலேம் நகருக்குத் தேவையான அத்தியாவசியத் தண்ணீரை வழங்கியது.

### ஊருணி வாசலின் வரலாற்று முக்கியத்துவம்:
எருசலேமின் வாயில்கள் பழுதுபார்க்கப்பட்டபோது, மிஸ்பா மாவட்டத்தின் ஆட்சியாளரான கொல்–ஹோசேயின் (Col-Hozeh) மகன் ஷல்லூனால் இந்த ஊருணி வாசல் பழுதுபார்க்கப்பட்டது. கூரை போடப்பட்டதாக குறிப்பிடப்பட்ட ஒரே வாசல் இதுவாகும். பெட்ரிசியா வான் லாரின் (Patricia Van Laar) எழுத்துக்களிலிருந்து "மேற்கூறிய மனிதர்கள் ராஜாவின் தோட்டத்திற்கு அருகிலுள்ள சீலோவாவின் குளத்தின் சுவரை தாவீதின் நகரத்திலிருந்து படிகள் வரை பழுதுபார்த்தனர்" என்று உறுதிப்படுத்தப்பட்டது. தொடர்ந்து பழுதுபார்க்கப்பட்ட பகுதிகளாவன அரச குடும்பத்தின் அரண்மனைகள், ஆசாரியர்கள் மற்றும் கோயில் ஊழியர்களின் குடியிருப்புகள் முதலியன. மேலும் நகரத்தின் இன்னொரு பக்கத்திலுள்ள தாவீதின் வீடு, செயற்கை குளம், வீரர்களின் வீடு, ஆயுதக் கிடங்கு, சுவரில் உள்ள மூலைகள், பிரதான ஆசாரியரின் வீடு, மேல் அரண்மனையின் கோபுரம், காவலர் நீதிமன்றம், ஓபேல் மலையில் உள்ள ஆலய ஊழியர்கள், லேவியர்கள், இந்த கட்டிடங்கள் மற்றும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் அனைத்தும் இந்நகரில் இருப்பதாக வரலாறு குறிப்பிடுகின்றது. இவ்வாறு பழுதுபார்க்கும் பணி எருசலேமிலிருந்த மக்களுக்கு மிகவும் பயனளித்தது.

### ஊருணி வாசலின் ஆவிக்குரிய முக்கியத்துவம்:
ஊருணி வாசல், தண்ணீருடன் தொடர்பு கொண்டதாகவும், இது ஆவிக்குரிய பெலனுக்கும், நித்திய வாழ்வை தரும் கடவுளின் பிரசன்னத்திற்கும் தொடர்புடையதாக உள்ளது. ஊருணி வாசல் (நீரூற்று வாசல்) கடவுளின் அடையாளமாகவும், பரிசுத்த ஆவியானவரின் புத்துணர்ச்சியூட்டும் மற்றும் புதுப்பிக்கும் வல்லமையின் அடையாளமாகவும், இதிலிருந்து வரும் தண்ணீர் பரிசுத்த ஆவியையும், இஸ்ரவேல் மக்களுடனான அவரது உடன்படிக்கையின் உறவையும் குறிப்பதாயுமுள்ளது. மேலும், இந்த நீரூற்று கடவுளின் வாழ்க்கையின் ஆதாரத்தை பிரதிபலிக்கிறதாயுமுள்ளது (சங்கீதம் 36:9; ஏசாயா 8:6).

### ஊருணி வாசலின் ஊழியத்தின் முக்கியத்துவம்:
ஊருணி வாசலைப் பழுதுபார்க்க வேண்டும் என்ற எண்ணம் நெகேமியாவிற்கு ஏற்பட்டது. பழுதுபார்ப்பின் குறிப்பிடத்தக்க நிலையையும், பெரிய நகரமான எருசலேமை பழுதுபார்ப்பதிலுள்ள பிரச்சினைகளின் விளைவுகளை நெகேமியா உணர்ந்தார். இந்த பழுதுபார்க்கும் பணி நகரத்தை மீட்பதற்கான ஒரு திட்டமாக இருந்தது. மேலும், இந்த நகரத்தைப் பழுதுபார்க்கும் பணிக்காக ஒரு குழுவினரை நியமிக்க வேண்டும் என்ற திட்டம் நெகேமியாவிற்கு ஏற்பட்டது. எருசலேம் நகர மக்கள் உயிர்வாழ்வதற்கு தண்ணீர் மிகவும் அவசியமானதாயிருப்பது போல, நம் தேசத்திலுள்ள 4635 மக்களினத்திற்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலுள்ள "ஜீவ தண்ணீர்" தேவைப்படுகிறது. எனவே நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவானது பாவத்தின் பிடியிலிருக்கும் மக்களுக்கு ஜீவ தண்ணீரான கடவுளின் வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளும் இயக்கமாக செயல்படுகிறது. மேலும் ஆலயம் மற்றும் கிறிஸ்தவ கூடுகைகள் இல்லாத வெவ்வேறு மக்களினங்களை தேர்ந்தெடுத்து, கலாச்சார மிஷனெரிகளாக அவர்கள் இடத்திலேயே தங்கி, அவர்களது கலாச்சாரத்தையும், மொழியையும் கற்றுக் கொண்டு, இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அவர்களது தாய்மொழியிலேயே அவர்களுக்கு அறிவிக்கின்றனர். இதனால் பல மக்களினங்கள் கடவுளின் வார்த்தைக்கு கீழ்படிந்து, உயிருள்ள கடவுளுடன் தங்களின் உறவை புதுப்பித்து கொள்கின்றனர். மேலும் அநேக கலாச்சார மிஷனெரிகள் முதியோர் கல்வி திட்டத்தின் மூலமும், எங்களது பள்ளிகளில் ஆசிரியர்களாகவும், மருத்துமனைகளில் மருத்துவ பணிகளில் ஈடுபட்டும் தங்களது ஊழியங்களைச் செய்து வருகின்றனர்.
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவானது புதிய கலாச்சார மிஷனெரிகளைத் தெரிந்தெடுத்து, வட மாநிலங்களில் சுவிசேஷத்தை அறிவிக்க மிஷனெரிகளை அனுப்புவதில் பெரும்பங்கு வகிக்கிறது.

### நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சவால்:
அன்பு வாலிப பிள்ளைகளே! கர்த்தர் உங்களை அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற்ற ஆவலாயுள்ளார். வட இந்தியாவில் அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களைக் காப்பாற்ற வேண்டியது மிகவும் முக்கியமானதும், அவசரமானதுமாகும். கடவுளின் அன்பை அறிவிக்கும் பணியைச் செய்ய நீங்கள் ஆயத்தமா? நீங்கள் பைபிள் மொழி பெயர்ப்பாளராகவோ, மிஷனெரியாகவோ, ஆசிரியராகவோ அல்லது மருத்துவப்பணி செய்பவராகவோ நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்து எங்களுடன் மிஷனெரி பணிச்செய்து நம் நாட்டிலுள்ள மக்கள் கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெற நீங்கள் ஆதாரமாக இருப்பீர்களா? உங்கள் பதில் என்ன?






NAME OF THE
TRANSLATOR






அதிகமாய்



